Registered as a Newspaper பக்கங்கள் 8 விலை: ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 10 ( 25-12-93 ) சனிக்கிழமை ஓசை 310

## குடிநீர் பாவனை குறித்து கவனம் செலுத்த கோரிக்கை

அண்மைய தொடர்மழை காரணமாக தமிழீழத்தின் பல பகுதிகளிலும் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக கழிவுநீர் கான், மலசலகூட கழிவுகள் முதலியவற்றால் குடிநீர் நிலைகள் மாசடைந்துள்ளன. இதனால் மலத்திலிருந்து பரவும் நோய்களாகிய வயிற்றோட்டம், வாந்திபேதி, வயிற்றுளைவு, நெருப்புக்காய்ச்சல், செங்கண் மாரி போன்ற நோய்கள் தீவிரமாகப் பரவும் நிலை ஏற்பட்டுள்ளது இவற்றின் தாக்கத்திலிருந்து எம் தேசத்தை பாதுகாத்துக் கொள்வதற்காக பின்வரும் சுற்றுப்புறச் சுகாதாரம் மற்றும் தனிநபர் சுகாதாரம் என்பவற்றை உறுதியாகக் கடைப்பிடிக்கும் படி மக்களை வேண்டிக்கொள்கிறோம்.

(8ஆம் பக்கம் பார்க்க)

# தொண்டமானின் சர்வாதிகாரத்திற்கு இ.தொ.காவில் இடமளிக்க முடியாது!

## செல்லச்சாமி பகிரங்க அறிவிப்பு

[கொழும்பு]

**கடத்தப்பட்ட ஏழு உறுப்பினர்களை தொண்டமான் கட்சியை விட்டு வெளியேற்றியமை கட்சியின் சம்பிரதாய விதிகளுக்கு முரணானதாகும். இது கட்சியில் அவரின் சர்வாதிகாரப் போக்கைக் காட்டுவதாகவே உள்ளது. இதனை ஒருபோதும் நான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் செயலாளரும், அமைச்சருமான செல்லச்சாமி தெரிவித்தார்.**

காலிமுகத்திடல் உல்லாச விடுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு கூறுகையில், மத்திய மாகாணசபை இ.தொ.கா. உறுப்பினர்கள் ஏழுபேரையும் கட்சி உறுப்புரிமையிலிருந்து விலக்குவதற்கு கட்சித் தலைவர் எடுத்த முடிவு தான்தோன்றித்தனமானது.

கட்சி உறுப்பினர்களை வெளியேற்றுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் கட்சியின் பொதுச் செயலாளருக்கே உண்டு எனவே செயலாளரின் பொறுப்புக்களை தலைவர் கைப்பற்றியுள்ளமையே இவரின் இந்நடவடிக்கை காட்டுகிறது.

இவ்வாறு இவ் உறுப்பினர்களை கட்சியிலிருந்து நீக்கியமை ஓர் அசாதாரண முடிவு. இதனை நான் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை.

கட்சியில் சம்பிரதாயங்களுக்கு எதிராக இவ்வாறு கட்சி உறுப்பினர்களுக்கு எவ்வாறு தொண்டமான் கடிதம் அனுப்ப முடியும்? கட்சியின் பொதுமுடிவைக் கேட்டு அதற்கு இசைவாக நடக்கவேண்டியது ஒருகட்சித் தலைவரின் கடமை. இதிலிருந்து தொண்டமான் தவறிவிட்டார்.

இவ்வாறு தொண்டமான் நடந்துகொண்டது கட்சியில் அவர் சர்வாதிகாரப் போக்குடன் நடந்துகொள்கிறார்

(7ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் பயணம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்குமான கப்பல் பயண சேவை சீரற்ற காலநிலை காரணமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது இதனைத் தொடர்ந்து கப்பலில் பயணம் செய்வதற்காக விண்ணப்பிப்போரின் விண்ணப்பங்கள் கையேற்கப்படுவதும் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

## படகுச்சேவை இன்று இல்லை

கிளாலி - பூநகரி படகுச் சேவை முன்னர் அறிவிக்கப்பட்டது போன்று இன்று நடைபெறாது. மறு அறிவித்தல் வரை இப்படகுச்சேவை நிறுத்திவைக்கப்பட்டுள்ளது என அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## யாழ். ஆயர் விடுத்த நத்தார் செய்தி

இன்று இளம் ஞாயிறுபோல் எம்மத்தியில் பிறந்த யேசு எமது உள்ளக்கதவுகளை திறந்து துன்பப்பட்டோர், துயருறுவோர், ஒடுக்கப்பட்டோர், நலிந்தவர்கள் மட்டில் கருணையும் அன்புறவும் கொண்டவர்களாய் நாம் வாழ துணைபுரிவாராக. இவ்வாறு யாழ். ஆயர் பேரருட் திரு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை விடுத்த நத்தார் செய்தியில் தெரிவித்துள்ளார். அச்செய்தியின் விபரம் வருமாறு:

இன்று எமது பகுதிகளில் நடக்கும் யுத்தத்தினால் திடீரென்று வானில் வந்து குண்டுகளைப் பொழிந்து மக்கள் உயிர்களுக்கும் பொருள்களுக்கும் ஏற்படும் பயங்கர அழிவுகளினாலும் பாதிப்புக்கு உள்ளாகி பயந்து அஞ்சி வாழும் நாம் மீண்டும் ஒருமுறை கிறிஸ்து பிறப்புக் காலத்தைச் சந்திக்கின்றோம். "எங்களுக்காக ஒரு பாலன் பிறந்துள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## பாலையடிவெட்டையில் பொதுமக்கள் துன்புறுத்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பாலையடி வெட்டை சிறிலங்கா இராணுவத்தினர், கடந்த 21ஆம் திகதி பலாச்சோலைக் கிராமத்தைச் சுற்றி வளைத்து பல பொதுமக்களைக் கைது செய்து கடுமையாகத் தாக்கிய பின்னர் இருவரை இராணுவ முகாமிற்கு கொண்டு சென்றனர்

கள் இருவரும் பலாச்சோலை கிராமத்தைச்சேர்ந்தவர்கள்.

மறுநாள் 22ஆம் திகதியும் காலை 9 30 மணியளவில் இதே முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் பலாச்சோலை கிராமத்திற்கு சென்று வீதியால் சென்றுகொண்டிருந்த பொதுமக்களைப் பிடித்து கண்மூடித்தனமாகத் தாக்கினார்கள். இரு

## மத்திய மாகாண ஏழு உறுப்பினர்மீது நடவடிக்கை எடுக்க இ.தொ.கா. முடிவு

மத்திய மாகாண சபையில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஏழு உறுப்பினர்கள் மீது தலை

இதேவேளை எதிர்வரும் ஜனவரி இரண்டாம் திகதி இ. தொ, காவின் தேசிய செயற்குழுக் கூட்டம் அட்டன் நக

மாகவே உள்ளது. எனினும் இவர்கள் ஐக்கியதேசியக் கட்சியை ஆதரிக்கப்போவதாக பத்திரிகையாளர் மாநாட்டில்

## நத்தார் வாழ்த்துக்கள்

ஈழநாதம் வாசகர்கள், விநியோகஸ்தர்கள், விளம்பரதாரர்கள், அபிமானிகள், பொது மக்கள் அனைவருக்கும் எமது நத்தார் வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தெரிவித்துள்ளார். அச்செய்தியின் விபரம் வருமாறு:

இன்று எமது பகுதிகளில் நடக்கும் யுத்தத்தினால் திடீரென்று வானில் வந்து குண்டுகளைப் பொழிந்து மக்கள் உயிர்களுக்கும் பொருள்களுக்கும் ஏற்படும் பயங்கர அழிவுகளினாலும் பாதிப்புக்கு உள்ளாகி பயந்து அஞ்சி வாழும் நாம் மீண்டும் ஒருமுறை கிறிஸ்து பிறப்புக் காலத்தைச் சந்திக்கின்றோம். ''எங்களுக்காக ஒரு பாலன் பிறந்துள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

விடுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு கூறுகையில், மத்திய மாகாணசபை இ. தொ. கா. உறுப்பினர்கள் ஏழுபேரையும் கட்சி உறுப்புரிமையிலிருந்து விலக்குவதற்கு கட்சித் தலைவர் எடுத்த முடிவு தான்தோன்றித்தனமானது.

கட்சி உறுப்பினர்களை பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் கட்சியின் பொதுச் செயலாளருக்கே உண்டு எனவே செயலாளரின் பொறுப்புக்களை தலைவர் கைப்பற்றியுள்ளமையே இவரின் இந்நடவடிக்கை காட்டுகிறது.

இவ்வாறு இவ் உறுப்பினர்களை கட்சியிலிருந்து நீக்கியமை ஓர் அசாதாரண முடிவு. இதனை நான் ஏற்றுக்

கட்சியில் சம்பிரதாயங்களுக்கு எதிராக இவ்வாறு கட்சி உறுப்பினர்களுக்கு எவ்வாறு தொண்டமான் கடிதம் அனுப்ப முடியும்? கட்சியின் பொதுமுடிவைக் கேட்டு அதற்கு இசைவாக நடக்கவேண்டியது ஒருகட்சித் தலைவரின் கடமை. இதிலிருந்து தொண்டமான் தவறிவிட்டார்.

இவ்வாறு தொண்டமான் அவர் சர்வாதிகாரப் போக்குடன் நடந்துகொள்கிறார்

(7ஆம் பக்கம் பார்க்க)

என அரசியல் துறையினர் தெரிவித்துள்ளனர்.

# பாலையடிவெட்டையில் பொதுமக்கள் துன்புறுத்தல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பாலையடி வெட்டை சிறிலங்கா இராணுவத்தினர், கடந்த 21ஆம் திகதி பலாச்சோலைக் கிராமத்தைச் சுற்றி வளைத்து பல பொதுமக்களைக் கைது செய்து கடுமையாகத் தாக்கிய பின்னர் இருவரை இராணுவ முகாமிற்கு கொண்டு சென்றனர்

கணபதிப்பிள்ளை இராசையா (35), சரவணமுத்து தர்மலிங்கம் (19), ஆகிய இருவரையுமே கைது செய்து கொண்டு சென்றனர். இவர்கள் இருவரும் பலாச்சோலை கிராமத்தைச்சேர்ந்தவர்கள்.

மறுநாள் 22ஆம் திகதியும் காலை 9 30 மணியளவில் இதே முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் பலாச்சோலை கிராமத்திற்கு சென்று வீதியால் சென்றுகொண்டிருந்த பொதுமக்களைப் பிடித்து கண்மூடித்தனமாகத் தாக்கினார்கள். இருவரை கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்று அங்கேயும்சித்திரவதைசெய்து பின்னர் விடுதலைசெய்தனர்.

## பொதுமக்களை கொலை செய்வித்து

# மூதூரில் அட்டகாசம் புரிந்த துரோகிக்குமரணதண்டனை

(திருமலை)

மூதூர்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன்இணைந்து நேரடியாக வந்து பொதுமக்களை சுடுவித்தும் கைது செய்வித்தும் அட்டகாசம் செய்ததுரோகிஒருவருக்குவிடுதலைப்புலிகளினால் மரண தண்டனை வழங்கப்பட்டது.

கடந்த 23 ஆம் திகதி பகல் 12. 15 மணியளவில் திருமலை பள்ளிக் குடியிருப்பு சிறிலங்கா இராணுவ முகாமிற்கும் தோப்பூர் பொலிஸ் நிலையத்திற்கு மிடையில் வைத்தே இம் மரண தண்டனை வழங்கப்பட்டது.

நாராயணன் செல்வம் (செல்வன்) பள்ளிக்குடியிருப்பு தங்கபுரம் மூதூர் என்பவருக்கே இத் தண்டனை வழங்கப்பட்டது.

# மத்திய மாகாண ஏழு உறுப்பினர்மீது நடவடிக்கைஎடுக்க இ.தொ.கா. முடிவு

மத்திய மாகாண சபையில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஏழு உறுப்பினர்கள் மீது தலைமைப்பீடம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இவர்கள் கட்சியின் பணிப்பிற்கு விரோதமாக செயற்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை எதிர்வரும் ஜனவரி இரண்டாம் திகதி இ. தொ, காவின் தேசிய செயற்குழுக் கூட்டம் அட்டன் நகரில் நடைபெறும் எனவும் இ. தொ. கா. தலைமைப்பீடம் அறிவித்துள்ளது.

அத்துடன் ஏழு உறுப்பினர்களும் இருக்குமிடம் மர்மமாகவே உள்ளது. எனினும் இவர்கள் ஐக்கியதேசியக் கட்சியை ஆதரிக்கப்போவதாக பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தமைக்காகவேஇவர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசு- இ. தொ. கா. முரண்பாடு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது?

(கொழும்பு)

சிறிலங்கா அரசுடன் எஸ். தொண்டமான் கொண்டிருந்த மோதல் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசில் நிலவிய கருத்து வித்தியாசங்களும் சமரஸமாகத் தீர்த்துக் கொள்ளப்பட்டது என வெரித்தாஸ்தெரிவித்தது

இருதரப்புப் பேச்சுவார்த்தைகளில் சிறிலங்கா அரசின் சார்பில் பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா, அரச சட்ட விவகாரத்துறை அமைச்சர் கே. என் சொக்ஸி, ஐக்கிய தேசியக்கட்சி செயலரும் அமைச்சருமான சிறிசேன குரே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தரப்பில் அமைச்சர் எஸ். தொண்டமான், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலர் எம். எஸ். செல்லச்சாமி ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அமைச்சர் செல்லச்சாமி ஐ,தே. கவுடன் இணைவார்?

இ. தொ, கா, தலைவருக்கும் பொதுச் செயலாளருக்கும் இடையேயான கருத்து வேறுபாடுகள் அதிகரித்துக் கொண்டு செல்வதாக சந்தேசிய தெய்தியாளர் தெரிவிக்கிறார்,

இந் நிலை இ, தொ, கா பிளவு படும் அபாயம் தெரிவதாகவும் இதனால் எம்.எஸ் செல்லச்சாமி அரசாங்க பக்கம் சாயக் கூடிய சூழ்நிலை இருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# நத்தார் வாழ்த்துக்கள்

ஈழநாதம் வாசகர்கள், விநியோகஸ்தர்கள், விளம்பரதாரர்கள், அபிமானிகள், பொது மக்கள் அனைவருக்கும்

எமது நத்தார் வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# எறிகணை வீச்சினால் இரண்டு வீடுகள் சேதம்

(கொழும்புத்துறை)

மண்டைதீவு இராணுவ முகாமில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுமுன்தினம்இரவு10.45 மணியளவில் யாழ். நகரை நோக்கி ஏவிய ஷெல் விழுந்து வெடித்ததில் இரு வீடுகள் சேதமடைந்தன

இந்த வீடுகளில் இருந்தவர்கள் அருகிலிருந்த வீடொன்றிற்கு சென்றிருந்தமையால் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.

குறிப்பிட்ட வீடுகள் கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் ஷெல்தாக்குதலினால் பாதிப்புக்குள்ளாயின. கடந்த வாரமும் மண்டைதீவில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரால் இப்பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது சிலவீடுகள் சேதமாகின.(24)

# நல்ல தலைமை இன்றி யுத்தம் நடத்த முடியாது

## தேசப் பிரேமி இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

நல்ல தலைமைத்துவம் இல்லாமல்யுத்தத்தில் வெற்றி பெற முடியாது. இவ்வாறு தேசப்பிரேமிபிக்குமுன்னணி, சிங்கள வழக்கறிஞர் சங்கம் உள்ளிட ஐந்து சங்கங்கள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் கூறப்பட்டுள்ளது.

யுத்தமொன்றுக்கு எந்த விதத் திட்டமுமின்றி போனதற்கு அவர்கள் பூநகரியில் ஏற்பட்ட தோல்வியையும், இழப்பையும் காரணமாகக் காட்டுகிறார்கள் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரவு நேரத்தில் எறிகணை வீச்சு

நேற்று மாலை 5.50 மணி முதல் பலாலி இராணுவ முகாமிலிருந்தும், மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்தும் ஆட்லறி எறிகணைத் தாக்குதல்கள்மேற்கொள்ளப்பட்ட வண்ணம் இருந்தன.

(8ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு

# பொறுப்புக்களை நிறைவேற்ற அரச, எதிர்க்கட்சிகள் தவறிவிட்டன

(கொழும்பு)

நாட்டில் தேசியப் பிரச்சினைகளுக்குத் தகுந்த தீர்வை உருவாக்கி மக்களின் ஆதரவைத் திரட்டவேண்டிய முக்கிய பொறுப்பு ஆட்சியில் உள்ளவர்களுக்கே உரியது. ஆனால் சிறிலங்காவில் தொடர்ந்து ஆட்சி செய்பவர்கள் மற்றும் எதிர்க்கட்சிகள் அந்தப்பொறுப்புக்களை நிறைவேற்றத் தவறிவிட்டனர்.

இவ்வாறு லங்கா கார்டியன் இதழில் ஜெனத் ராஜபக்ஷ எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

1983 ஜூலையில் தமிழர்களுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தியமையும், பின்பு 6-வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியதன் மூலம் அரசியல் சட்டத்தையும் பலப்படுத்தியதும், அரசு இதயசுத்தியுடன் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க விரும்பாத போக்கையே காட்டுகிறது. எதிர்க்கட்சிகள் அரசின் நடவடிக்கைகளை எதிர்ப்பதேயன்றி, தகுந்த வழிமுறைகளை முன்வைக்கத் தவறிவிட்டன.

இனப்பிரச்சினை தீர்வுக்கான மங்கள முனசிங்கா தீர்வுக்குழு அமைக்கப்பட்டும் சமாதானத் தீர்வை எட்ட முடியாத நிலையைக் காண்கின்றோம். இவ்வாறு அந்தக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனி, இங்கு இனப்பிரச்சினை இல்லை. வடக்கில் பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது என்றும் கூறப்படுகின்றது. நாட்டின் சுதந்திரத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதால் யுத்த நிலையிலேயே நாட்டை வைத்திருக்க விரும்பும் அரசு வடக்கையும், கிழக்கையும் பிரித்தாள்வதின்மூலம்அமைதியற்ற நிலையை ஏற்படுத்தி, அதனை இனப்பிரச்சினைக்கு எதிரான யுத்த தந்திரமாக கடைப்பிடிக்கலாம்,என அரசு நினைக்கின்றது. அத்துடன் சிறிது காலத்தில் விடுதலைப் புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கையில்

(7ஆம் பக்கம் பார்க்க)

# அவசரகால சட்டத்திற்கு பத்திரிகையாளர் கண்டனம்

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் அமுலாக்கப்பட்டது குறித்து பத்திரிகையாளர் சங்கமான சுதந்திர தகவல்துறைச்சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

அசுரத்தனமான அவசரகாலச் சட்டம் தற்போது நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு என்னஅவசரம் ஏற்பட்டது என அச்சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

தெற்கில் தோட்டத்தொழிலாளர் வேலைநிறுத்தத்தை மேற்கொண்டதை அடுத்துக் கடந்த திங்கட்கிழமை சிறிலங்கா அரசினால் அவசரகாலச்சட்டம்பிரகடனப்படுத்தப்பட்டது தெரிந்ததே.

# தமிழீழ இலக்கத்தகடுகள் பொருத்த ஜனவரி 3வரை காலஅவகாசம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மூன்றாம் திகதி முதல் தமிழீழ அடையாள இலக்கத்தகடு, வரி அட்டை இன்றி ஊர்திகளை வீதிகளில் பாவிப்பவர்கள் மீது தமிழீழக் காவல்துறையினர் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளனர். இந்நடவடிக்கை முதலில் கடந்த 24ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் வாகன உரிமையாளர் நன்மைகருதி எதிர்வரும் மூன்றாம் திகதிவரை கால நீடிப்புசெய்யப்பட்டுள்ளதாக தமிழீழ காவல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்

**பெற்றுக்கொள்ளவும்**

ஸ்ரார் வாச் வேக்ஸ் ஸ்தாபனத்தில் திருத்தம் செய்ய கொடுக்கப்பட்ட உங்கள் மணிக்கூடுகளை எனது இல்லத்தில் பெற்றுக் கொள்ளவும் க. பரமேஸ்வரன் 399, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (7021)

**திருமண சேவை**

பொருத்தமான மணமகன்/மணமகள் எம்மிடம் உண்டு. தொடர்பு:- மங்களஏஜென்சி கொய்யாத்தோட்டம். (7006)

**தேவை**

பெனியன், சோட்ஸ்,தைப்பதற்கு அநுபவமுள்ளவர்கள் தேவை. தொடர்பு! ஜெகா தையலகம்.729 கே, கே.எஸ். வீதி.யாழ் நகர். (7004)

**'ஞானரதம்' வெளியீடு**

(கொழும்புத்துறை)

கோப்பாய் பிரதேச தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலைய பயிற்சி ஆசிரியர்களினால் ''ஞானரதம்'' கையெழுத்து சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது.

சஞ்சிகையின் வெளியீட்டு விழா புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது (24)

**திறப்புவிழா**

(தொல்புரம்)

சங்கானைவட்ட செஞ்சுடர் கலைக் கழக காரியாலயத் திறப்புவிழாவும், கலைஞர் கௌரவிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் தொல்புரம் டச்சு வீதி சிற்றூர் செயலகத்தில் கழகத் தலைவர் திரு. க. சிவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவதுடன், நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் ''சின்ன விழிகள்'' குறும்பட வீடியோ படக்காட்சியும் இடம்பெறவுள்ளன. (41)

**மணிவிழா**

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரி பிரதி அதிபர் கப்டன் நா. சோமசுந்தரம் அவர்களின் ''மணி விழா'' நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

**'ஒளிவீச்சு,**

---

# வெற்றிடங்கள்

தொடங்கப்படவுள்ள நிதி நிறுவன மொன்றிற்கு, அமர்த்தப்படுவதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து கீழ்க்காணும் தொழில்நிலைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

தொழில் நிலைகள்-

(1) முகாமையாளர்
(2) அலுவலர்
(3) எழுதுனர்

விண்ணப்ப முடிவு நாள்:- 05.01.1994


விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி

**விளம்பர இல. 304,**
**மே/பா. ஈழநாதம்,**
**மகேந்திரா வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:- கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் தொழில்நிலையின் பெயரையும், விளம்பர இலக்கத்தையும் குறிப்பிடவும். (சி/8211)

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்:
26-05-74

வீரச்சாவு:
11-11-1993

### லெப்டினன்ட் ஆறுமுகம்
### (சோதிநாதன் கஜேந்திரன்)

(மாதர் சங்க வீதி, சித்தன்கேணி)

தன்மானத் தமிழன் அணி புலி அணி
அதில் நீ ஒரு வீரனாய் தாய் மண்
மானம் காக்க களம் பல ஆடினாய்

பூநகரியிலும் தவளை போல் சென்று புலியாகிப் பாய்கையில் எதிரி குண்டு பட்டு நீ வீழ்ந்த செய்தி கேட்டு,

மின்னல் கிழி கிழித்து, இடி இடித்து, காற்று சுழல் சுழல் என்று சுழன்று அடித்தது போல் ஒரு கணம் நாம் கலங்குகிறோம்.

ஆனாலும் இம் மண் விடிவிற்காய் நீ கொண்ட இலட்சியக் கனவு நனவாகி உலகம் உள்ளவரைக்கும் உன் பெயர் உச்சரிக்கப்படும்.

இவரோடு மரணித்த ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்,

அபி மெடிக்கல் ஏஜென்சி,
மானிப்பாய்,

பிரிவுத் துயரில் தவிக்கும்
தாய், சகோதரர்,
சகோதரி,

---

## 45ஆம் நாள்
## நீங்காத நினைவலைகளும் அந்தியேட்டி அழைப்பிதழும்



தாயின் மடியில்:
***1968. 08. 21***

தமிழீழ மண்ணில்:
***1993. 11. 11***

### லெப்டினன்ட் தாமரை
### (ஜெயவீரசிங்கம் கோகிலா)

விராங்கொடை தெல்லிப்பழை

நாட்கள் நாற்பத்தைந்து ஆனாலென்ன
நகருமா உங்கள் நினைவின் பாரம்
காலங்கள் ஆயிரம் போனாலென்ன - அவை
கலையுமா உங்கள் நினைவை
விராங்கொடைதனில் கோகிலா - நீ
தம்பியின் தானையில் லெப்டினன்ட் - தாமரை நீ
எதிரியை மாய்த்திட பாய்ந்திட்ட தவளையில்
புறநானூறு காணா பெண்புலியும் - நீ
மாவீரர் காவியத்தின் அத்தியாயம்.

ஒபரேசன் தவளையில் பூநகரியில் வீரச்சாவடைந்த சகல மாவீரரையும் நினைவு கூருகின்றோம்- 25-12-93 தாமரையின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் சகபோராளிகள், உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தற்போதைய முகவரி:
சுதுமலைச்சந்தி,
மானிப்பாய். (6989)

உம் பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்

---

## 'றோ' அமைப்பைச் சேர்ந்த பலர் பாகிஸ்தானில் கைது

இந்திய உளவுப் பிரிவான 'றோ' அமைப்பைச் சேர்ந்த பலர் பாகிஸ்தான் அரசால் கைது செய்யப்பட்டுள்ளனர் என பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது. இதேவேளை நாட்டின்பாதுகாப்புக்கருதியும் நாட்டின்முதலீட்டாளர்களைக்கவரும் வகையிலும் பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டத்தை அமுல்படுத்த பிரதமர் ஷியா அழைப்பு விடுத்துள்ளார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

---

## நினைவு கூருகின்றோம்...

**1993 . 12 . 25**

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய
**✻ நாகமணி தேவசகாயம்** (தம்பிலுவில் அம்பாறை)

1986ஆம் ஆண்டு மட்டு-கோட்டைக்கல்லாறுப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய
**லெப். சசி** (பொன்னையா சிறிதரன்-குருமண்வெளி மட்டு.)

1987ஆம் ஆண்டு இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்துக் கொலை செய்யப்பட்ட மானிப்பாய் சுதுமலை தெற்கைச் சேர்ந்த இளைஞன்'

1989ஆம் ஆண்டு எறிகணைத்தாக்குதலில் பலியான எமது ஆதரவாளர்,
**பாலா** (இருபாலை)

1990ஆம் ஆண்டு மயிலவெட்டுவான் பட்டகல் ஆற்றில் மூழ்கியதில் எமைப்பிரிந்த
**கொனிற் ! கென்றி** (பூபாலசிங்கம் தர்மலிங்கம் -வந்தாறுமூலை மட்டு)

1992ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் சுகவீனம் காரணமாக எமைப்பிரிந்த, துணைப்படை வீரர்,
**ஜேம்ஸ் ராஜபக்ச** (முள்ளிவாய்க்கால் மேற்கு - முல்லைத்தீவு)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

✻ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**
(சி/8193)

---



## மக்கள் திலகம் புரட்சித் தலைவர்

அமரர் **எம். ஜி. ஆர்.** அவர்களின்

# 6ஆம் ஆண்டு நினைவுநாள்

இடம்: தாவடி திறந்தவெளி அரங்கு, பிள்ளையார் கோவிலடி

தில் கழகத் தலைவர் திரு. க. சிவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி விழாவின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுவதுடன், நிகழ்வின் இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் ''சின்ன விழிகள்'' குறும்பட வீடியோ படக்காட்சியும் இடம்பெறவுள்ளன. (41)

## மணிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரி பிரதி அதிபர் கப்டன் நா. சோமசுந்தரம் அவர்களின் ''மணி விழா'' நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## 'ஒளிவீச்சு, படக்காட்சி

(கொழும்புத்துறை)

யாழ் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இன்று மாலை 6. 30 மணிக்கு நவம்பர் மாத ''ஒளி வீச்சு'' வீடியோ படக்காட்சியும், ''சின்ன விழிகள்'' என்னும் குறும்படமும் நிலையத்தினரால் காண்பிக்கப்படவுள்ளது. (24)

## வீதி விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் தற்போதுவீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. நேற்று மதியம் அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் மோட்டார் சைக்கிளும் சைக்கிளும் மோதிக் கொண்டதில் சைக்கிளை ஓட்டிவந்த நபர் தலையின் பின்புறத்தில் காயமடைந்தார். பிற்பகல்இதேபோன்று வேம்படிச் சந்தியில் ஒரு விபத்து இடம்பெற்றதில்சைக்கிள் பலத்தசேதமடைந்தது. (22)

## கலை விழா

அரியாலை சனசமூக நிலையப் பாலர் பாடசாலை மாணவர்களின் வருடாந்தக் கலைவிழா எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 6. 30 மணியளவில் நடைபெறவுள்ளது. இவ் விழாவில் பிரதம விருந்தினர்களாக திரு. திருமதி நகுலேந்திரனும் சிறப்புவிருந்தினராக பா. செல்வரட்ணமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## பொதுச்சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க 'பொதுச்சபைக் கூட்டம்' எதிர்வரும் வியாழக்கிழமை யாழ். புனித மரியாள் வித்தியாலய (ஓ. எல். ஆர்) மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு. ப. கனகலிங்கம் தலைமையில் நடைபெறும். (22)

---

(சோதிநாதன் கஜேந்திரன்)

(மாதர் சங்க வீதி, சித்தன்கேணி)

தன்மானத் தமிழன் அணி புலி அணி
அதில் நீ ஒரு வீரனாய் தாய் மண்
மானம் காக்க களம் பல ஆடினாய்

பூநகரியிலும் தவளை போல் சென்று புலியாகிப் பாய்கையில் எதிரி குண்டு பட்டு நீ வீழ்ந்த செய்தி கேட்டு,

மின்னல் கிழி கிழித்து, இடி இடித்து, காற்று சுழல் சுழல் என்று சுழன்று அடித்தது போல் ஒரு கணம் நாம் கலங்குகிறோம்.

ஆனாலும் இம் மண் விடிவிற்காய் நீ கொண்ட இலட்சியக் கனவு நனவாகி உலகம் உள்ளவரைக்கும் உன் பெயர் உச்சரிக்கப்படும்.

இவரோடு மரணித்த ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்,


அபி மெடிக்கல் ஏஜென்சி,
மானிப்பாய்,
ஆனைக்கோட்டை.

பிரிவுத் துயரில் தவிக்கும்
தாய், சகோதரர்,
சகோதரி,
மா. தவக்குமார்
குடும்பத்தினர்.
(சிறிய தகப்பனார்)

(7002)

---

# 2ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்

01 — 08 — 1973

வீரச்சாவு

24 — 12 — 1991

## கப்டன் வாணன்

### சண்முகலிங்கம் மோகனகுமார்

உரும்பராய் கிழக்கு

(புன்னாலைக்கட்டுவன் ஈவினைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப் பிரிந்தவர்.)

மண் மீட்பில் உயிர்தந்த மாவீரா!
ஆண்டுகள் இரண்டு போனாலும்
கண்ணின் நீர் இன்னும் காயவில்லை
மீண்டும் மீண்டும் உன் நினைவே எம் உள்ளத்தில்

இந்நாளில் வீரச்சாவடைந்த சீராளன், இளம்பரிதி வேங்கைகளை நினைவு கூருகிறோம்.

நல்லலட்சுமி அவனியூ,
159|2 கோயில் வீதி,
நல்லூர்.

அம்மா, அண்ணா
தம்பி, அம்மம்மா
ஐயா

(7035)

---

மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தற்போதைய முகவரி:
சுதுமலைச்சந்தி,
மானிப்பாய். (6989)

உம் பிரிவால் துயருறும்
- குடும்பத்தினர்

---

பட்டவராவர்.

தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி/8193)

---




# மக்கள் திலகம் புரட்சித் தலைவர்

அமரர் **எம். ஜி. ஆர்.** அவர்களின்

# 6ஆம் ஆண்டு நினைவு நாள்

**இடம்:** தாவடி திறந்தவெளி அரங்கு, பிள்ளையார் கோவிலடி
**நாள்:** 26.12.93 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி

தலைவர்: பொன். மதிமுகராஜா (அனைத்துலக எம். ஜி. ஆர். பேரவைத் தலைவர்)

## நினைவுநாள் பொதுக்கூட்டம்

**தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் கலந்துகொள்வார்கள்**

**பிரதம அழைப்பாளர்கள்**

திரு. கா. மாணிக்கவாசகர் (அரச அதிபர், யாழ்.
திரு. சி. வி. கே. சிவஞானம் (முன்னாள் மாநகராட்சி மன்ற ஆணையாளர்)
கலாநிதி க. குணராஜா (பிரதேச செயலர்)

**சிறப்பு அழைப்பாளர்கள்**

திரு. எஸ். பத்மநாதன் (திட்டமிடல் பணிப்பாளர்)
திரு. பொ. பாலசிங்கம் (ஆணையாளர், யாழ். மா. சபை)

**சமயகுரவர்களின் ஆசி**

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
அருட்திரு. எஸ். எச். ஜெபநேசன்

**சி. ராஜபேட் வழங்கும் கரகாட்டம்**

கலைவாணர் நாடகமன்றம் வழங்கும் இரா. பற்குணத்தின் நகைச்சுவை நிகழ்ச்சி

**கவியரங்கம்:-** **எம். ஜி. ஆர். எமக்கு ஓர் கலங்கரை விளக்கம்**

தலைவர் காரைசுந்தரம்பிள்ளை,
ந. வீரமணிஐயர்,
சோ. பத்மநாதன்,
சா. வே. பஞ்சாட்சரம்,
திரு. தேவதாசன்,
ம. விஜயமதி, ம. கஸ்தூரிமதி

**பட்டிமன்றம்:-** எம். ஜி. ஆர். நிலைத்த புகழுக்கு பெரிதும் காரணம்

**சினிமாவே?** **அரசியலே?** **கொடையே?**

திரு. இ. ஜெயராசா (கம்பன் கழக அமைப்பாளர்)
திரு. தம்பி சிவகுமாரன்
திரு. கே. எஸ். முத்துலிங்கம்
திரு. ஆறுதிருமுருகன்
திரு. நந்தகுமார்
திரு. சுந்தரம் டிவகலாலா (உள்ளூராட்சி உதவி ஆணையாளர்)

திரு. குழந்தைவேலு (எம். ஏ.)
திரு. தயாளன் (ஆசிரியர்)
திரு. அ. குமாரவேலு (பி. ஏ.)
திரு, பொன் கணேசமூர்த்தி
திரு. எஸ். வேலாயுதம் (கல்விப் பணிப்பாளர்)
திரு. கனகநாகேஸ்வரன்
திரு. இரா செல்வவடிவேலு

**மங்கள இசை** கானமூர்த்தி-பஞ்சமூர்த்தி சகோதரர்கள், வி. பாலகிருஷ்ணன் குழுவினர்
**மங்கள விளக்கேற்றல்** திரு. வைத்திலிங்கம் (மேலதிக அரச அதிபர்)
**தமிழ்த்தாய் வாழ்த்து** சங்கீதபூசனம் ந. வி. மு. நவரத்தினம்
**நினைவுப் பேருரை** திரு. அ. சண்முகதாஸ் (தலைவர் தமிழ்த்துறை யாழ். பல். கழகம்)

**வில்லிசை**

**ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினர்**

கலைமாமணி எஸ். எஸ். சர்மா வழங்கும் **கலியுக வள்ளல்**

**மெல்லிசை**

**ஈழநல்லூர் அருணா இசைக்குழு வழங்கும்**

## எம். ஜி. ஆர் இரவு 'இசை அமுதம்'

வரவேற்புரை: இலகநாதன் (எம். ஜி. ஆர். மு. க.) நன்றியுரை: J. டியூக் இன்பராஜா (அ. தி. மு. க. செயலாளர்)
மேலதிக விபரம்: அனைத்துலக எம். ஜி. ஆர். பேரவை, எம். ஜி. ஆர். முன்னேற்ற கழகம்

அமரர் டாக்டர் புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர். அவர்களின் 6ஆவது ஆண்டு சிறப்பாக நடைபெற வாழ்த்துக்கூறும்

**சீமாட்டி புடவை நிலையத்தினர்**

## 45-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 02 – 12 – 1966

வீரச்சாவு 11 – 11 – 1993

### கப்டன் பழனிவேல் (கண்ணன்)

(சங்கரப்பிள்ளை பஞ்சேந்திரன்)
(வேலணை வடக்கு - வேலணை)

வாகை சூடிய பூநகரிப் போரிலே
வரிகொள் வேங்கைப் புலிகளோ டுடன்புகுந்(து)
ஒகை யோடமர் மலைந்துசிங்களச் சேனை
ஒடத்தாக்கு - பஞ்சேந்திர ''புலிகளின்
தாகம் தமிழீழ தாயகம்'' என்ற உம்
தாரகம் தாங்கு தறு கண்மை போற்று வோம்
ஈகமான நின் எண்ணங்கள் ஈடேற
வாகை சூடும் வரிப்புலி யாவோம்:

தற்போதைய முகவரி;
700, நாவாந்துறை வீதி,
5 சந்தி,
யாழ்ப்பாணம். (6964)

அப்பா, அம்மா, சகோதர சகோதரிகள், உறவினர், நண்பர்கள்

## 45-ம்நாள் நினைவஞ்சலி



தாயக மண்ணுக்காக
தாய் மடியில்
09-10-1976

தாயக மண்ணுக்காக
பூநகரி மண்ணில்
11-11-1993

### 2-ம் லெப்டினன்ட் குமணன்

(ஸ்ரீபன் ஜெராட் குணசீலன்)

விடுதலையைக் காண விழைந்தாய்
விதையாக மண்ணில் விழுந்துவிட்டாய்

## 45-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்:
08-01-1973

தாயக மண்ணில்:
11-11-1993

11-11-1993 அன்று பூநகரி கூட்டுப்படைத்தளத் தகர்ப்பில் வீரச்சாவடைந்த,

### 2ம் லெப்டினன்ட் அமுதவல்லி

(சாந்தலிங்கம் புஸ்பகுகேசா)
(வேலணை துறையூர்)

வண்டினந் தேனுண்டெழுந்து வளம்பாடும் வேலணையில்
வீரர் பலரும் விளங்கு துறையூரில்
சாந்த குணமிக்க சாந்தலிங்கம் தனக்கு
பொன்மகளாக உதித்த புஸ்பகுகேசாவே!

ஆண்டு தொண்ணூற்றி ஒன்று தன்னில்
அண்ணன் படையணி சேர்ந்து அணிசெய்தாய்
ஆனையிறவு, மணலாறு, புலோப்பளைச் செருவில்
வீரமுடன் செருவில் வீணரைத் தொலைத்தாய்.

பாதகர் பலர் நிறைந்த பூநகரித் தளத்தில்
புறமுதுகிடாது முன்னேறி மூர்க்கரை அழித்து
விடுதலை வேள்வியில் ஆகுதிஆகி
தமிழீழ மண்ணிற்கு உயிர்தந்து உரமாகி விட்டாய்.

உன்தன் இலட்சியம் ஈடேற நாமும் உன்தன் வழி நடக்க உறுதி கொள்கின்றோம்!

வரணி வடக்கு,
வரணி. (6939)

-குடும்பத்தினர்

## 45-ம் நாள் நினைவஞ்சலி



மாதகல் வாழ்வில் வவி
என்னும் பெயருடன்:
05-05-1973

மாவீரர்வாழ்வில் ஈழமாறன்
என்னும் பெயருடன்:
11-11-1993

### பதவி யேற்றார்

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலாளர் திரு. எஸ். முருகேசம் பிள்ளை ஓய்வு பெற்றதையடுத்து புதிய பிரதேச செயலாளராக திரு. ஆ. சிவசாமிதனது பதவியைபொறுப் பேற்றுள்ளார். இவர் யாழ். மாவட்டகம நலசேவை சிரேஷ்ட ஆணையாளராகவும் முல்லைத்தீவு செயலக, (காணி) மேலதிக அரசாங்க அதிபராகவும் பணிபுரிந்தவர். (யோ)

### பொது இடங்களில் மரம் நடுகை

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் சுமார் 600 வேம்பு, சவுக்கு, மலைவேம்பு தேக்கு மரங்கள் பொது இடங்களில் நாட்டப்பட்டு வருகின்றன. கரவெட்டி பிரதேச செயலர் திரு. செ. ஸ்ரீனிவாசனின் நடவடிக்கையைத் தொடர்ந்து வன திணைக்களத்தினர் இந் நிழல் தரும் மரங்களை கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு வழங்கியிருந்தனர். (25)

### பண உதவி

யா/ மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தின் வளர்ச்சிகருதி அப் பகுதிமக்கள் அப் பாடசாலையை முன்னேற்றும் நோக்குடன் அப் பாடசாலைக்கு மூவாயிரம் ரூபாவரை தற்போது பணமாக வழங்கியுள்ளனர். இதே வேளை பாடசாலைக்கு மேலும் உதவிகளை செய்வதற்கு பொது மக்கள் முன்வந்துள்ளார்கள். (86)

### நாற்றுமேடைகள் அங்குரார்ப்பணம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் பிரதேச ரீதியாக நாற்றுமேடைகளை அங்குரார்ப்பணம் செய்து வருகின்றது. இந்த நாற்றுமேடைகளில் பயன் தரும் நல்லின மரக்கன்றுகள், மரக்கறி நாற்றுக்கள், நிழல் தரும் மரங்கள், தென்னை, கமுகு போன்றவையும் நாற்றுப் போடப்பட்டுள்ளன.

### இலக்கிய சந்திப்பு

(கொழும்புத்துறை)

இருபாலை தமிழ் மாமன்றம் (கற்பகப் பிள்ளையார் கோவில் பின் வீதி) பருத்தித்துறை வீதி இருபாலை மன்ற மண்டபத்தில் மன்றக் காப்பாளர் கவிஞர் எஸ். கே. ஜீவமோகன் தலைமையில் எதிர் வரும்28 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 30 மணிக்கு தமிழ்எழுத்தாளர்கவிஞர்கள், விமர்சகர்கள், ஓவியர்கள், நடிகர்கள், கலைஞர்கள் ஆகியோரை ஒருங்கிணைந்த ஓர் இலக்கிய சந்திப்புக்கு [illegible] (24)

## 45-ம் நாள் நினைவு நிகழ்வு



### கப்டன் கரிகாலன் (மஞ்சு)

தர்மரட்னம் பிரபாகரன்

தாயின் மடியில்
16-11-1972

தாயகவிடிவிற்கு
11-11-1993

தந்தைக்கு மூத்தமைந்தனாய் உதித்தாய்
தரணியைக் காக்க தலைவனுடன் இணைந்தாய்
சிந்தையிலே நீயும் செயல் வீரனானாய்
சிறப்புடனே நீயும் பூநகரைவென்றாய்
பெற்றவர்கள் உள்ளத்தில் கவலைதனை வளர்த்தாய்
இருந்தாலும் அவர்கட்கு புகழ்மாலைதொடுத்தாய்
மற்றவர்கள் உள்ளத்தில் மாவீரனாய் நிலைத்தாய்
மங்காத புகழோடு வானுலகம் புகுந்தாய்

**தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலில் தோன்றாமை நன்று**

என்றும் வள்ளுவர் வாக்கு அமைய வாழ்வெய்திய பிரபாகரன் (கரிகாலன்) அவர்களுடன் பூநகரியில் இன்னுயிர் ஈந்த அனைவரையும் சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.

இந்நிகழ்விற்கு சகபோராளிகள், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-- குடும்பத்தினர்

94, அம்பலவாணர் வீதி,
யாழ்நகர். (7005)



09-10-1976

தாயக மண்ணுக்காக
பூநகரி மண்ணில்
11-11-1993

## 2-ம் லெப்டினன்ட் குமணன்
(ஸ்ரீபன் ஜெராட் குணசீலன்)

விடுதலையைக் காண விழைந்தாய்
விதையாக மண்ணில் விழுந்துவிட்டாய்
விருட்சமாக மீண்டும் எழுந்திடுவாய்

இவருடன் பூநகரி முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்.

கோவில்குடியிருப்பு,
சாவகச்சேரி
(சி/ 7007)

அம்மா, ஐயா,
அண்ணன், அக்கா, உறவினர்கள்,
நண்பர்கள்.

## 45-ம் நாள் நினைவஞ்சலி



காரைநகரில்:
11-08-1975

பூநகரியில்:
11-11-1993

## கடற்புலி 2-ம் லெப். ஏழுமலை
(சதாசிவம் சிவாகரன், காரைநகர்)

ஆளுமை மிக்க அறிவோடு உயர்ந்தாய்
அதிசயமான அழகோடு வளர்ந்தாய்
தோழமையாக எம்மோடு வாழ்ந்தாய்
துடிக்கவிட்டு எங்கு நீ சென்றாய்!
வாழ்ந்திடவே வளமோடு பிறந்தாய் — தமிழர்
வாழ்வுக்காய் கடற்புலியாய் மடிந்தாய்
ஈழமக்கள் துயர் தீர்க்க எழுந்தாய்
ஏழுமலையென ஈழத்தில் நிமிர்ந்தாய்
பூநகரிப் போரினிலே கலந்தாய்
புதியவரலாறு தமிழருக்குப் படைத்தாய்

காரைநகர்.
(7018)

மறவாமல் மனமுருகும்,
உற்ற நண்பர்கள்.

## 45-ம் நாள் நினைவஞ்சலி



மாதகல் வாழ்வில் வவி
என்னும் பெயருடன்:
05-05-1973

மாவீரர்வாழ்வில் ஈழமாறன்
என்னும் பெயருடன்:
11-11-1993

## கப்டன் ஈழமாறன் (தினேஷ்)
[சுப்பிரமணியம் இந்திரகுமார் (வவி)]

இணைபிரியா நண்பர்களாய் இருந்தோம்
ஈழநாட்டின் இன்னல் கண்டு கொதித்தாய்
ஈழப் போரினிலே சேர்ந்தாய்
ஈழத்தின் பூநகரி மண்ணினிலே மாவீரனானாய்

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

சாந்தி !

உன்பிரிவால் துயருறும்
சுந்தர்.

சத்தியா அன் கோ
இல. 22, கன்னா திட்டி,
யாழ்ப்பாணம்.
(சி-8199)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



வீரச்சாவு:
11-11-1993

## லெப். பத்மசுகி
சி. சிவாசினி

அன்பிற்கும் பாசத்திற்கும் இனிய மகளே எம்மண் எமக்கு பெரிதென நினைத்து மண் மீட்கச் சென்றாயோ அங்கு மருத்துவப் போராளியாகிக் களம் பல கண்டாய். அங்கு உனது பணியை ஆற்றி எதிரியையும் வெருட்டினாய். இறுதியில் உன் தம்பியின் பாதையில் நீயும் பின் தொடர்ந்தாயோ ஆம் உங்கள் இருவர் பாதையிலும் நாமும் தொடர்வோம்.

391, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.
(6988)

தாய், சகோதரர்கள், பேரன்
இளைப்பாறிய அதிபர்
ச. சொக்கலிங்கம் மற்றும்
உறவினர்கள், நண்பர்கள்.

மரக்கறி நாற்றுக்கள், நிழல் தரும் மரங்கள், தென்னை, கமுகு போன்றவையும் நாற்றுப் போடப்பட்டுள்ளன.

## இலக்கிய சந்திப்பு
(கொழும்புத்துறை)

இருபாலை தமிழ் மாமன்றம் (கற்பகப் பிள்ளையார் கோவில் பின் வீதி) பருத்தித்துறை வீதி இருபாலை மன்ற மண்டபத்தில் மன்றக் காப்பாளர் கவிஞர் எஸ். கே. ஜீவமோகன் தலைமையில் எதிர் வரும்28ஆம்திகதிசெவ்வாய்க் கிழமை காலை 9 30 மணிக்கு தமிழ்எழுத்தாளர்கவிஞர்கள், விமர்சகர்கள், ஓவியர்கள், நடிகர்கள், கலைஞர்கள் ஆகியோரை ஒருங்கிணைந்த ஓர் இலக்கிய சந்திப்புக்கு ஏற்பாடுசெய்துள்ளது. (24)

## தோட்டத்திலிருந்த மிதிவெடியால் காயம்

தோட்டத்தைப் பண்படுத்திக் கொண்டிருந்த போது மண்வெட்டி மிதிவெடிஒன்றை எதிர்பாராதவிதமாக கொத்தியதில் மிதிவெடி வெடித்து இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார் நேற்றுமுன் தினம் பத்தைமேனி அச்சுவேலிப் பகுதியில் தோட்டத்தை பண்படுத்திக் கொண்டிருந்த செல்லத்துரை நந்தகுமார் (வயது18) என்பவரே இவ்வாறு காயமடைந்தார்.

காலிலும் முகத்திலும் காயமடைந்த இவர் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்(சி)

## பாண் பேக்கரிகளில் திடீர் சோதனை

வடமராட்சிப் பகுதியில் பாவனையாளர்களுக்குத் தரமற்ற பாண் விநியோகம் சில இடங்களில் நடைபெறுவதாகப் பாவனையாளர்கள் சுகாதாரத் திணைக்களத்திற்குப் பலத்த புகார்செய்துள்ளதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. இதையடுத்து வடமராட்சிப் பகுதியில் உள்ள பேக்கரிகள் சுகாதாரத் திணைக்கள திடீர் நடவடிக்கைக் குழுவினரின் திடீர்ச் சோதனைகளுக்குள்ளாகிவருகின்றன-

திடீர்ச் சோதனைகளின் போது சில தரமற்ற பாண் தயாரிப்பு பேக்கரிகள் அகப்பட்டுக் கொண்டதாகவும் அவைகள் கடுமையாக எச்சரிக்கைக்குள்ளானதாகவும் தெரிவித்த சுகாதாரதிணைக்கள அதிகாரிகள் தொடர்ந்து பேக்கரிகள் பாண் விற்பனை நிலையங்கள் மீது கண்காணிப்புச் செலுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர். (25)

இருந்தாலும் அவர்கட்கு புகழ்மாலைதொடுத்தாய்
மற்றவர்கள் உள்ளத்தில் மாவீரனாய் நிலைத்தாய்
மங்காத புகழோடு வானுலகம் புகுந்தாய்

தோன்றிற் புகழோடு தோன்றுக
அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று

என்றும் வள்ளுவர் வாக்கு அமைய வாழ்வெய்திய பிரபாகரன் (கரிகாலன்) அவர்களுடன் பூநகரியில் இன்னுயிர் ஈந்த அனைவரையும் சிரம் தாழ்த்தி வணங்குகின்றோம்.

இந்நிகழ்விற்கு சகபோராளிகள், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-- குடும்பத்தினர்

94, அம்பலவாணர் வீதி,
யாழ்நகர்.
(7005)

## 45-ம் நாள் நினைவலைகள்



ஈன்றதாய் மடியில்:
09.06.1969

ஈழத்தாய் மடியில்:
11-11-1993

பூநகரியில் வீரச்சாவு எய்திய

## கப்டன் கண்ணன் | தினேஷ்
(தில்லையம்பலம் தர்மலோகன்)

மண்ணின் விடிவிற்காய் நீ மண்மடியில்
சிந்திய குருதி
எம் இதயங்களில் ஆறாக ஓடுதே பாசமது பெருகி
இளவயதில் ஈழம் காணச் சென்ற வீரா
உன் வீரத்திற்கு என்றுமில்லை யாரும் நிகராய்
''கண்ணா'' உன் பிரிவை எம் நெஞ்சம்
தாங்கவில்லையே
உன்னை களத்திற்கனுப்பிய தாயார் இன்னும்
தூங்கவில்லையே
''கண்ணா'' உன் பிரிவால் வாடுதப்பா பலஉயிர்கள்
மாவீரா உனை என்றும் பூஜிக்கும் எம் உள்ளங்கள்

அன்னாரின் ஈமக்கிரியைகளின் போது பங்கு பற்றிய போராளிகளுக்கும் உற்றார், உறவினர் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

354/9 பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(6982)

உன் பிரிவால் வாடும்
அம்மா, சகோதர சகோதரிகள்
மருமக்கள்

பூநகரி வெற்றியில் புலிமறவன்

## 45-வது நாள் நினைவு



### 2-வது லெப். வதனன்

(நடராஜசர்மா கலையழகன்)

புவிவாழ்வு : *1975-06-12* முதல்
*1993-11-11* வரை

இன்னல் துடைக்குந் தாகம்
எங்கள் வதனர்க்கு மோகம்
சன்னம் ஏந்திக் சரத்தில்
சண்டை செய்ய நினைந்தே
பென்னம் பெரிய நட்பும்
பெறறோ ருறவு மெல்லாம்
சின்னஞ் சிறியதாய்த் தெரிய
சிறந்தே போரிற் புகுந்த ன்
போர்க்கலை வடிவ மிவனாம்
கலையழக னவன்தன் பெயராம்
ஊரைத் துறந்து போயே
உன்மதக் களத்திற் சுழன்று
வேரோடு சாய்க்கும் புயலாய்
வெற்றிக் களத்தில் வீழ்ந்து
ஈரம் தந்து விட்டான்
எம்கண் ணீரென்றும் சொரிய.

எமது அன்புச் செல்வத்தின் பிரிவுத் துயரின்போது சகல வகையிலும் ஆறுதல் அளித்த உற்றார். உறவினர், நண்பர்கள், போராளிகள அனைவரிற்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேம் அத்துடன் 25-12-1993 (இன்று) நடைபெற இருக்கும் அவரது ஆத்மசாந்திக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்-

'இந்திரபிரஸ்தம்',
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை. (6959)

இங்ஙனம்
குடும்பத்தினர்

---

11-11-1993 பூநகரி இராணுவமுகாம் தகர்ப்பில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட லெப்டினன்ட் கலையரசனின்

## 45-ம்நாள்நினைவஞ்சலி



---

## 43-ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
08-05-1973

வீரச்சாவு
13-11-1993

### 2-ம் லெப். பரிசுதன்

(ஆறுமுகம் சந்திரசேகர்)

கல்லடி மட்டக்களப்பு

பூநகர் புலிநகர் ஆவதற்கே
போர்தனில் புகுந்த புலிகளுடன்
தானுமோர் வீர தமிழ் மகனாய்
சார்ந்துமே வீரச்சாவுற்றார்
நேயமார் பரிசுதன் நிலவுலகின்
நீங்காத நினைவினில் நீடுற்றார்

இன்று நடைபெறும் மதியபோசனத்தில் உற்றார் உறவினர், நண்பர்கள். சகபோராளிகளை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

தகவல்
அண்ணன் குடும்பத்தினர்,
தாய், தந்தை, சகோதரர்கள்

5|1, வேலப்பர் லேன்,
அரியாலை.

(7022)

---

## 45-ம்நாள்நினைவலைகள்



தாயின் மடியில்:
12 - 10 - 1969

தாயக மண்ணுக்காய்
பூநகரி முகாம் தகர்ப்பில்:
11 - 11 - 1993

### 2ம் லெப். தமிழகன்

(ஸ்ரனிஸ்லாஸ் யஸ்ரின் எட்வின் கிங்ஸ்லி)

தமிழினத்தின் விடிவிற்காய்
தமிழகனாய் வடிவெடுத்தாய்
புலி வீரனாய் புகழ்பரப்பி களம் பல கண்டாய்
பூநகரி முகாம் தகர்த்துப்
புளகாங்கிதமாய் முன்னேறி
உன்னை மரணம் சந்தித்த கடைசிநிமிடம் வரை

---

## 45 ம் நாள் நினைவில்



தாயின் மடியில்:
10-03-1975

தாயக மண்ணில்:
11-11-1993

### 2ம் லெப். லட்சுமி

(தேவிகா புதியாக்குட்டி)

புதுவை மண் பெருமை கொள்ள
பூவும் புயலென நீ புலியானாய்
புதிய வரலாறு படைத்திட்ட
பூநகரிச் சமரதில் வெற்றிதனை தந்துவிட்டு
தமிழ் மண்ணுக்கு நீ வித்தானாய்
உம்மோடு வித்தான
மாவீரர்களின் நினைவுகளை
எம் நெஞ்சோடு சுமக்கின்றோம்.

எமது இல்லத்தில் 25-12-93 இன்று நடைபெறும் இந்நினைவு நிகழ்வில் உறவினர்கள், போராளிகள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி மிக அன்புடன் அழைக்கின்றோம்.

முஸ்தபா வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்

குடும்பத்தினர்

(6990)

---

## 45ம்-நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில்:
05-12-1976

தாயக மண்ணில்:
11-11-1993



### வீரவேங்கை மகிந்தன்

(தம்பித்துரை அன்பழகன் (கமல்))

பால் மணம் மாறாப் பாலகன் - நீ
பாவிகள் எமைப் பரிதவிக்க விட்டு
பார் மீட்கப் புறப்பட்டனையோ
வழிமேல் விழிவைத்து நீ
வருவாய் எனக் காத்திருக்க
வீறு கொண்டு எழுந்து நீ
இன்று மாவீரர் வரிசையில்
மங்கா இடம் பெற்றாய்

---

## கண்டெடுப்பு

சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் அண்மையில் ஒருதொகைப் பணம் கண்டெடுக்கப் பட்டுள்ளது அதன் உரிமையாளர் கச்சாய்வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள நிதித்துறையின் வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் உரிய ஆதாரங்களை காண்பித்து பெற்றுக் கொள்ளுமாறுகேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஃ ஃ ஃ

இளையவி பொன்னுத்துரை, அளவெட்டி வடக்கு என்பவரது அடையாள அட்டையும், வேறுசில ஆவணங்களும் எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளவும்.

## பாதிப்புற்றோருக்கு உதவி வழங்கப்பட்டது

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வெளியேறியபொம்மை வெளிப் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு சுமார் நூறு உணவுப் பொட்டலங்களை யாழ்' மாநகர பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் வழங்கியுள்ளது.

மேலும் நல்லூர் சனசக்தி சனசமூக நிலையத்தில் வைத்து அரசடிப் பகுதியைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜே. 103 கிராமசேவகரினால் உடனடி நடவடிக்கையாக உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

---

### வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

### நாகலிங்கம் இராமலிங்கம்

நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதனுடன் 25-12-1993 (இன்று) நடைபெற இருக்கும் அவரது ஆத்மசாந்திக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


'இந்திரபிரஸ்தம்',
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை. (6959)

இங்ஙனம்
குடும்பத்தினர்

---

11-11-1993 பூநகரி இராணுவமுகாம் தகர்ப்பில் வீரச் சாவைத் தழுவிக்கொண்ட லெப்டினன்ட் கலையரசனின்

## 45-ம் நாள் நினைவஞ்சலி



## லெப்டினன்ட் கலையரசன்

**(வேலாயுதம்பிள்ளை மாலதன்)**

மீசாலை வடக்கு

தாயின் மடியில் :
**03-06-1974**

தாயக மண்ணில்;
**11-11-1993**

சாவு உறுதி என்றறிந்து சொற்பமும்
சலித்திடாது களம் நாடினாய் - இங்கு
மேவு துயரினைக் களையவே சமர்
வீசு புயலாகி ஆடினாய் !
நாளுமே "கலை அரசனென்"றவுன்
நாமம் மண்ணிலே வாழும் - புலி
ஆளும் நாள்வரும் புன்மை நீங்கு(ம்) உன்
ஆசை நிறைவேறும் கொடி உயரும்

— நிலா தமிழின் தாசன்

25-12-1993 சனி (இன்று) நடைபெறவிருக்கும் வீட்டுக்கிரியைகளிலும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மீசாலை வடக்கு,
மீசாலை. (6953)

**வேலாயுதம்பிள்ளை**
**குடும்பத்தினர்.**

---



தாயின் மடியில்:
**12 - 10 - 1969**

தாயக மண்ணுக்காய்
பூநகரி முகாம் தகர்ப்பில் :
**11 - 11 - 1993**

## 2ம் லெப். தமிழகன்

**(ஸ்ரனிஸ்லாஸ் யஸ்ரின் எட்வின் கிங்ஸ்லி)**

தமிழினத்தின் விடிவிற்காய்
தமிழகனாய் வடிவெடுத்தாய்
புலி வீரனாய் புகழ்பரப்பி களம் பல கண்டாய்
பூநகரி முகாம் தகர்த்துப்
புளகாங்கிதமாய் முன்னேறி
உன்னை மரணம் சந்தித்த கடைசிநிமிடம் வரை
உன் துப்பாக்கி எதிரியைத் துளைத்ததாம்
இன வெறியரை வீழ்த்தி நின்
இன் உயிரை - கிங்ஸ்லி
இம் மண்ணுக்காய் வித்திட்டாய்
நின் வேட்கைகள் நனவாகும்
நின் ஆத்மா சாந்தி பெறுக !

நின் பிரிவாற்றாமைத் துயரில் நின்று, உனக்காகவும் உன்னுடன் மடிந்த சகமாவீரரதும் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கும்,

இளாலி,
எழுதுமட்டுவாள்.
(7009)

**அன்பு அப்பா, அம்மா,**
**சகோதர சகோதரிகள்.**

---

## 45-வது நாள் நினைவஞ்சலி



மலர்வு
**28-03-1974**

உதிர்வு
**11-11-1993**

## கப்டன் ஈழவாசன்

**(கதிரமலை ஜெயபாலசிங்கம்)**

ஏழாண்டும் அதன் பின்னும் அத்யந்த அன்புடனே
எம்முடன் நெருங்கி நின்றஜெயபாலா!
தமிழீழ மண்ணை வென்றெடுக்க உயிர்நீத்த
பொழுதிலும்
என்றென்றும் எம்மிடையே நிறைந்திருப்பாய்!

- வளர்ப்பு பெற்றோர்

கைதடிச்சந்தி,
கைதடி
25-12-1993
(6993)

---

தாயின் மடியில்:
**05-12-1976**

தாயக மண்ணில்:
**11-11-1993**



## வீரவேங்கை மகிந்தன்

**(தம்பித்துரை அன்பழகன் (கமல்))**

பால் மணம் மாறாப் பாலகன் - நீ
பாவிகள் எமைப் பரிதவிக்க விட்டு
பார் மீட்கப் புறப்பட்டனையோ
வழிமேல் விழிவைத்து நீ
வருவாய் எனக் காத்திருக்க
வீறு கொண்டு எழுந்து நீ
இன்று மாவீரர் வரிசையில்
மங்கா இடம் பெற்றாய்

இவருடன் பூநகரித் தளத் தகர்ப்பில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் அஞ்சலி செலுத்துவதுடன் 25-12-93 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 16 எழிலூர் துண்டி
கொழும்புத்துறை.
(சி-7011)

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா,
சகோதர சகோதரிகள், மைத்துனர்,
மைத்துனிமார், உற்றார் உறவினர்,

---

## 45 ம் நாள் கண்ணீர் அஞ்சலி



உலகப்புகழ்
ஒப்ரேசன் தவளை
பூநகரி

**11-11-1993**

## மேஜர் பிரகாஸ்

**(பரமநாதன் அருள்நாதன்)**


(இல22,2ம் யூனிட், பாலிநகர் வவுனிக்குளம்)

மலரப் போகும் இம்மண்ணின் விடுதலைக்காக
களம் பல கண்டாய்
உலகப்புகழ் ஒப்ரேசன் தவளையாய் - பூநகர்
தீயினில் ஆகுதியானாய்
நண்பனே! வீரனே!
நீ நடந்த பாதையில் பூமலரும் - எழுதப்போகும்
வரலாறு புறநானூறு உன்புகழ் பாடும்
நீ சுமந்த ஆயுதம் நீ அள்ளித் தந்த ஆயுதம்
இங்கு உறங்காது - அது உறுமும் - இது உறுதி

**நண்பர்கள்.**

வேலணை, கல்வியங்காடு, பாண்டியன்குளம்
வவுனிக்குளம் உயிலங்குளம் துணுக்காய். (6991)

---



அமரர்

## நாகலிங்கம் இராமலிங்கம்

(முன்னாள் ஓய்வு பெற்ற தெல்லிப்பளை யூனியன் கல்லூரி ஆசிரியர்)

உருவாய் அருவாய்
12-01-1912 22-11-1993

22-11-93 அன்று சிவபதமெய்திய வீமன்காமம் வடக்கு தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முத்தட்டுமட லேன் (செல்வராஜா வீதி), கோண்டாவில் மேற்கை தற்காலிக வதிவிடமாக கொண்டவருமாகிய எமது சகோதரரின் மறைவின்போது எமது துயரில் பங்கேற்றோருக்கும், பல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது சகோதரரின் ஆத்ம சாந்திக்காக (25-12-93) இன்று காலை 10 மணியளவில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரணத்தில் பங்கு பற்றுவதோடு அதன் பின் நடைபெறும் மதியபோசனத்திலும் குடும்ப சமேதராய்க் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
நா. அம்பிகைபாகனும்,
சகோதரர்களும்.

முத்தட்டுமட லேன்,
(செல்வராஜா வீதி)
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(7024)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



### லெப்டினன்ட் கலைஞன் (ரகீம்)
### (சுப்பிரமணியம் சத்தியசீலன்)

தாயின் மடியில்: **05-02-1970**

தாயக விடிவில்: **11-11-1993**

தாயகத்து மண்காக்கத்
தன்மானத்துடன் எழுந்தாய்!
தலை நிமிர்த்தித்
தலைவன் படையணியிலே இணைந்தாய்!
குடாநாட்டின் குரல்வளையை
குதறிடவே குவிந்த
பூநகரிப் படை முகாமில்
புகுந்து பகை வென்றாய்!
தற்கொடையாய் உனதுயிரைத்
தந்து சென்றாய் - உந்தன்
தடமதிலே தாள் பதித்து
தொடர்ந்திடுவோம் பணியை!

இவரது நினவாக எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தபால்பெட்டி வீதி,
இருபாலை. (சி-7015)

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

---

## 45.ம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



தாயின் மடியில்: **27-09-1975**

தாயக மண்ணில்: **11-11-1993**

### லெப்டினன்ட் சுகந்திரா
### (செல்வராசா அழகானந்தி)

மண் விடுதலைத் தாகம் கொண்டு
பெண் புலியென நீ நடந்தாய்
வீறு நடையுடனே வீரம் கொண்டு
தனியாற்றல் நீ படைத்தாய்
பூநகரில் பாயும் புலியாக களம் புகுந்து
சமர்க்களம் நீ ஆடினாய்
வீரத்தின் வெற்றியுடன் தாயகத்தில் சரிந்தாயோ?
ஆனந்தி மாறுமோ உன் நினைவு?
ஆறுமோ எங்கள் மனம்?

இறுதிக் கிரியைகளிலும் அனுதாபத்திலும் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் அளித்த போராளிகள், நண்பர்கள் உறவினர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி.

25-12-1993 சனிக்கிழமை அன்று வீட்டில் நடைபெறும் அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்விலும், மதிய போசன விருந்திலும் போராளிகளையும் நண்பர்களையும், உறவினர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புலோலி மேற்கு,
பருத்தித்துறை. (6978)

குடும்பத்தினர்

---

## இலவச வைத்தியசாலை

நாகர்கோவில் பகுதியில் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் இலவச வைத்தியசாலை பருத்தித்துறை பிரதேச சபை குடத்தனை உப அலுவலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டு பிரதி சனிக்கிழமைகள் தோறும் பொது மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

## உறுதிச்சிட்டைஅனுப்ப கோரிக்கை

குழந்தைகள் பால்மா முத்திரை 12ஆம் மாதத்திற்குரிய புள்ளிகள் மற்றும் நவம்பர் மாதம் வரைக்குமான உணவு முத்திரைக்கான புள்ளிகளுக்கு பொருள்கள் வழங்கிய வகையால் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களுக்கு சமூகசேவைப் பகுதியில் இருந்து சேரவேண்டிய கொடுப்பனவுகள் தொடர்பான உறுதிச் சீட்டுக்களை உடனடியாக செயலக சமூக சேவை பிரிவுக்கு டிசம்பர் 27 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கும் படி கேட்கப்பட்டுள்ளது

இந்த நிதியாண்டுக்குள் கொடுப்பனவுகள் யாவும் பூர்த்தி செய்யப்படவேண்டியுள்ளதால் சகல ப. நோ. கூ. சங்கங்களும் டிசம்பர் 27ஆம் திகதிக்கு முன்னர் அவற்றை அனுப்பிவைக்கும்படி மேலும் கேட்கப்பட்டுள்ளது. (சி)

---

## 45ஆம் நாள் நினைவு..!



பிறப்பு: **21.04.1973**

வீரச்சாவு: **11-11-1993**

### கப்டன், இளம்பருதி, விஸ்வநாத்
### [ஆறுமுகம் றஜீந்திரன்]

(ஊரெழு)

இன்று 25-12-93 எமது இல்லத்தில் இவரின் நினைவாக வழங்க விருக்கும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு சக போராளிகளையும், உறறார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன்அழைக்கிறோம்.

(7037)

குடும்பத்தினர்

---

## 45 ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்: **28 - 03 - 1976**

விரச்சாவு: **11 - 11 - 1993**

### வீரவேங்கை இன்பன்
### (தம்பிராசா மங்களேஸ்வரன்)

மண்ணகத்துப் பூத்த மங்களேஸ்வரனை மக்கள்
விண்ணகத்துப் புலி வீரனாக்கியே போற்றினர்
எம் மினத்தை அழித்தொழிக்க அரக்கராய் அரசபடை
எவ்வடிவில் வந்தாலும் எமலோகம் அனுப்பிவைப்பான்

அன்னை தந்தை சோதரரை அருமைதரு உறவினரை
தன்நாவில் இயம்பாது களம் புகுந்தான் இவ் இன்பன்
மண்ணதே உயிராய் மானமே பெரிதாய் மறத் தமிழ்
வீரனாய் எழுந்தான்
தன்னிகரிலாச் சாதனையை பூநகரில் புரிந்து தன்
தாரணிக்கே பெருமை சேர்த்தான்
காற்றுமே உன்புகழ்க் காவியம் பாடிட
கண்களில் கங்கையும் கைகளில் பூவுமாய் விண்தனை

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: **14-11-1975**

வீரச்சாவு: **11-11-1993**

---


## 45—ம் நாள் நினைவஞ்சலி



பூநகரியில் வீரகாவியம்
படைத்த
வீரவேங்கை
### முருகவேல்
(நாகேந்திரம் -பிரபாகரன்)
(சாமிவீதி, ஆவரங்கால் )

---

## 45ம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்

இவரது நினைவாக எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தபால்பெட்டி வீதி, இருபாலை. (சி-7015) நினைவுகளுடன் குடும்பத்தினர்

## 45ம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
05-08-1971

அன்னை தமிழுக்காய்
11-11-1993

### கப்டன் தூயமணி (நஜிபுல்லா)

(தளையசிங்கம் உமாசங்கர்)
(புங்குடுதீவு - 1)

11-11-93 அன்று பூநகரி இராணுவ முகாம் தகர்ப்பில் தன்னை ஆகுதி ஆக்கிக் கொண்ட கப்டன் தூயமணி மற்றும் இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தாயினும் நிகரான - தமிழீழ
தாயகத்தை மீட்டிடவே
தணியாத தாகத்துடன்
தலைவன் வழிநடந்திரே
சாவினைச் சரித்திரமாக்கி
சாதனை பல புரிந்திரே
விடியலுக்கு விளைநிலமாய்
தமிழுக்கே வித்தாகி
தமிழீழச் சொத்தானீர்
நாட்கள் பல மறைந்தாலும் தூமணியே
உந்தன் நினைவுடன் வாழ்கின்றோம்

உன்ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

25-12-93 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் கிரியையிலும், மதியபோசனத்திலும் சக போராளிகள், உற்றார், உறவினர்களையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

உந்தன் நினைவுடன் வாழும்
அன்பு அம்மா, அம்மம்மா, அண்ணன்மார், அக்கா, தங்கைமார், தம்பி, மற்றும் உற்றார், உறவினர்கள்.

தற்போதைய முகவரி;
இல. 175/2, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (7019)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு:
14-11-1975

வீரச்சாவு:
11-11-1993

### 2ஆம்லெப் பல்லவி

(சுந்தரம் ஜெயாநந்தினி)
(அராலி தெற்கு வட்டுக்கோட்டை)

பல்லவி என்னும் திருநாமம் கொண்டே
களம் பல கண்டு எதிரியை வீழ்த்தி
பூநகரிப் போரில் மடிந்து வீழ்ந்து
வரலாறு படைத்தாய் வாழாங் கிருந்து
இரவு பகலாய் மறவா நினைப்போம்
இனிநாம் உம்மை எங்கு காண்போம்
விளக்கே நீயும் விதை ஆனையோ
விடிவைத்தேடி விரைந்து சென்றனையோ
தமிழ் மண் விரைவில் விடிவைக் காணும்
தமிழீழம் அது இனிதே மலரும்.

இன்று 25-12-93 எமதில்லத்தில் நிகழும் 45-ம் நாள் அந்தியேட்டிக் கிரியைகளில் சகபோராளிகளையும், உறவினர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பாருதி வீதி, மீசாலைமேற்கு, மீசாலை. (6986) குடும்பத்தினர் உற்றார், உறவினர்.



பூநகரியில் வீரகாவியம் படைத்த
### வீரவேங்கை முருகவேல்

(நாகேந்திரம் -பிரபாகரன்)
(சாமிவீதி, ஆவரங்கால் )

பிறப்பு: 1975-02-08
வீரச்சாவு: 1993-11-11

நினையாத வேளை
எமைப் பிரிந்து
நாற்பத்தி ஐந்துநாள்
போனது
தம்பி!
நீ எங்களைப் பாராமல்
கனவாகிப்
போனது ஏனோ?
உனைக்காணாது
தவிக்கின்றோம்

உன்பிரிவால் துயருறும் அப்பா, அக்காமார், அத்தான்மார், அண்ணன், மருமக்கள், மற்றும், உற்றார் உறவினர், நண்பர்கள்.

இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகளையும் அன்பர்களையும் அழைக்கின்றோம். (சி- 0712)



11 - 11 - 1993

### வீரவேங்கை இன்பன்

(தம்பிராசா மங்களேஸ்வரன்)


மண்ணகத்துப் பூத்த மங்களேஸ்வரனை மக்கள்
விண்ணகத்துப் புலி வீரனாக்கியே போற்றினர்
எம் மினத்தை அழித்தொழிக்க அரக்கராய் அரசபடை
எவ்வடிவில் வந்தாலும் எமலோகம் அனுப்பிவைப்பான்

அன்னை தந்தை சோதரரை அருமைதரு உறவினரை
தன்நாவில் இயம்பாது களம் புகுந்தான் இவ் இன்பன்
மண்ணதே உயிராய் மானமே பெரிதாய் மறத்தமிழ்
வீரனாய் எழுந்தான்
தன்னிகரிலாச் சாதனையை பூநகரில் புரிந்து தன்
தாரணிக்கே பெருமை சேர்த்தான்
காற்றுமே உன்புகழ்க் காவியம் பாடிட
கண்களில் கங்கையும் கைகளில் பூவுமாய் விண்தனை
நோக்கியே விம்மி நின்றோமடா

உன் பிரிவால் தவிக்கும்
அம்மா, அப்பா, சகோதரர், சகோதரிகள், மற்றும்உறவினர்கள், நண்பர்கள்.

உச்சியோடை
மானிப்பாய்.
1993-12-25
(6961)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்:
17-08-1966

தாயக மண்ணில்:
11-11-1993

### கப்டன் பேரின்பன் (சுருளி)

(இராசு வசந்தமோகன்)
உரும்பராய் தெற்கு, செல்வபுரம்

மண்ணில் பிறந்தாய் மகிழ்ந்தனர் பெற்றோர்
அன்புடன் இருந்தாய் அணைத்தனர் சகோதரர்
அறிவுடன் வளர்ந்தாய் ஆதரித்தனர் சுற்றமுள்ளோர்
நேர்மையுடன் வளர்ந்தாய் தேசப்பற்றானாய்
துணிந்தாய் துயரம் விட்டாய்
இணைந்தாய் புலி இயக்கத்தில்
களம் பல கண்டாய்
பெரும் புகழ் படைத்த
பூநகரிச் சமரில் உன்
புகழ் உடல் சரித்தாய்
தமிழ் மண்ணை முத்தமிட்டு
மாவீரனாய் மறவோம் மறவோம்
உன் மகத்தான விடுதலையை...

உன் பிரிவால் துயருறும்
தாய், சகோதரர், மைத்துனர், உற்றார், உறவினர்கள்.

(6999)


எமது வாடிக்கையாளப் பெருமக்களுக்கு

## நத்தார் - புத்தாண்டு வாழ்த்துக்களைத்

தெரிவித்துக் கொள்கின்றோம்.

### எமது உற்பத்தி பொருட்களான

ஊறுகாய்வகைகளான உள்ளி, பாவற்காய், தேசிக்காய் மற்றும் வெங்காயச் சட்டினி, அச்சாறு, மாங்காய் சட்டினியுடன் சோஸ் வகைகளான தக்காளி, மிளகாய், உள்ளி, வெங்காயம், மாங்காய் என்பவற்றையும் பதப்படுத்திய பலாப்பழத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்.

இல. 125, மின்சார நிலைய வீதியில் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள Paper Merchantsஇல் பெற்றுக் கொள்ளலாம்.

TASTE LINE INDUSTRIES (PVT) LTD.
14, Seeniar Lane, Jaffna.

(சி-8201)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



குச்சவெளியில்
முத்தாய் மலர்ந்தது:
30 011 74

பூநகரியில்
வித்தாய் நிறைந்தது:
11-11 1993

### கப்டன் செந்தமிழரசு (சிவராசா)

(தர்மலிங்கம் சுரேஷ்காந்தன்)

(குச்சவெளி, திருக்கோணமலை)

நெஞ்சம் நிறைந்த சொத்தானாய்
விடுதலை வேட்கை நீ கொண்டு
வீசும் புயலாய்க் களஞ் சென்றாய்!
அடிமையுற்ற தமிழ் மாந்தர்
அவலம் துடைக்கப் புலியானாய்!
முடிவே இல்லாப் புகழ் தாங்கி
முத்தே! வீர வித்தானாய்!
நெடிதே உயர்ந்த நிறை மதியே — எங்கள்
நெஞ்சம் நிறைந்த சொத்தானாய்!

செந்தமிழீழம் மலர்விக்கச்
''செந்தமிழரசு'' நீயானாய்
நொந்தழும் மாந்தர் துயர்களையும்
நோக்கம் ஒன்றே குறியானாய்!
விந்தைப் புதல்வா சுரேஷ்காந்தா
விடியல் கூட்டும் ஒளியானாய்
உந்தன் கனவு பலித்துய்ய
உனையே நினைந்து நிமிர்கின்றோம்.

பூநகரியில் எமது மகனுடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்

'சீலன் நகர்' அப்பா, அம்மா, சகோதர,
நாவற்குழி, சகோதரிகள், மற்றும் உறவினர்,
கைதடி நண்பர்கள்.

(6949)

## 45-ம் நாள் நினைவலைகள்



### 2ம் லெப். ஈழப்பிரியா

மதிவதனி நவரட்ணம்

(கொழும்புத்துறை)

தாயின் மடியில்
06 - 06 - 1970
வீரச்சாவு
11 - 11 - 1993

புயல் அடிக்க இடிஇடிக்க
புல்லினமோ கண்கசக்க
மழைமேகம் மண்நனைக்க

நடந்தாயே ஈழம்
இறுக்கமான இருட்டினிலே
எம்மவரின் படையெடுப்பில்
பூநகரி மண்மீட்கப்

புறப்பட்ட புலிப்பெண்ணே
இலட்சிய தாகத்துடன் எழுவோம்
ஈழத்தின் எல்லையை மீட்போம்

(6997)



### கப்டன் சுதர்சனா

விஜயலக்சுமி பாலசிவராஜா

(முள்ளியவளை, மணலாறு)

தாயின் மடியில்
20 - 03 - 1976
வீரச்சாவு
11 - 11 - 1993

நிமிர்ந்த நடையும் நேரானஉன்பார்வையும்
சடுதியால் கூறும்உன்வார்த்தைகளும்-இன்று
எங்கே போய் ஒளிந்து கொண்டது
புகைப்படப்பிரிவில் இருந்து பொறுமை
நிறைந்த நீ
புயலாய் எழுந்தாய் களத்திற்கு
புலோப்பளையில் உன்சமர் கண்டு
வியந்தவர்கள் பலர்
ஆனாலும் பூநகரியில் உன்திறன் கண்டு
திகைத்தவர்கள் உன்குறும்புத் தனத்தை
அங்கேயும் காட்டினாய் அதையிட்டு
மகிழ்ந்தோம் காலைக் குண்டு
துளைத்துநெஞ்சில் குண்டு துளைக்கும்வரை
நின்றாயே- அந்தவேளை நீ மண்ணையே
முத்தமிட்டுச் சென்றாய் உன்கனவு
நினைவாகும் வரை எம் துப்பாக்கி ஓயாது

புகைப்படப்பிரிவு
தமிழீழ விடுதலைப்புலிகள்


## தேவை

வர்த்தக நிலையம் ஒன்றிற்கு
**கணக்குப்பதிவாளர் தேவை.**
அனுபவங்களுடன் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:-

விளம்பர இல: 303
மே. பா. ஈழநாதம்
31, மகேந்திரா வீதி
யாழ்ப்பாணம்.

(6996)

## இறைச்சிக்கோழி

புறொய்லர் - கோழிகள்
**விற்பனைக்குண்டு.**
சுத்தம் செய்தும வழங்கப்படும்.

**சுவையருவி**
**கோழிப்பண்ணை**

7, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி - 8203)


## முக்கிய அறிவித்தல்

25 - 12 - 93 சனிக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கத்தின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 19 - 01 - 94 புதன்கிழமை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச
வர்த்தகர் சங்கம்

968, பருத்தித்துறை வீதி
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(சி 8207)


நத்தார் - புதுவருட பண்டிகையை முன்னிட்டு

**காமதேனுவின்**
**நல்வாழ்த்துக்கள்**

விருந்துபசாரத்திற்கும் சிற்றுண்டிகள் தயாரிப்பதற்கும் தேவையான:-


1. இறைச்சிக் கோழிகள்
2. முட்டைகள் [கோழி, தாரா]


போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்,

**காமதேனு**
**விவசாய கால்நடைப் பண்ணை**
வெள்ளை வீதி
சுன்னாகம்.


## 6ஆம் ஆண்டு 45ஆம் நாள் 45ஆம் நாள்

## நினைவலைகள்





'சிலன் நகர்' நாவற்குழி, கைதடி

அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள், மற்றும் உறவினர், நண்பர்கள்.

(6949)

ஈழத்தின் எல்லையை மீட்போம்

(6997)

அங்கேயும் காட்டினாய் அதையிட்டு
மகிழ்ந்தோம் காலைக் குண்டு
துளைத்தும் நெஞ்சில் குண்டு துளைக்கும்வரை
நின்றாயே- அந்தவேளை நீ மண்ணையே
முத்தமிட்டுச் சென்றாய் உன்கனவு
நினைவாகும் வரை எம் துப்பாக்கி ஓயாது

புகைப்படப்பிரிவு
தமிழீழ விடுதலைப்புலிகள்


நத்தார் - புதுவருட பண்டிகையை முன்னிட்டு

காமதேனுவின்

நல்வாழ்த்துக்கள்

விருந்துபசாரத்திற்கும் சிற்றுண்டிகள் தயாரிப்பதற்கும் தேவையான:-

1. இறைச்சிக் கோழிகள்
2. முட்டைகள் [கோழி, தாரா]

போன்றவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்,

காமதேனு
விவசாய கால்நடைப் பண்ணை
வெள்ளை வீதி
சுன்னாகம்.

(சி - 8202)


6ஆம் ஆண்டு | 45ஆம் நாள் | 45ஆம் நாள்

# நினைவலைகள்



கடற்புலி லெப்டினன்ட்
**வெங்கடேஸ்**
(சண்முகசுந்தரம் ஜீவாகரன்)
மலராக: 01. 04. 1968 வீரச்சாவு: 10. 05 1988



கடற்புலி லெப். கேணல்
**பாமா (கோதை)**
(சண்முகசுந்தரம் சியாமளா)
மலராக: 28. 03. 1971 வீரச்சாவு: 12. 11. 1993



கடற்புலி கப்டன்
**கற்பகன்**
(நடனசிகாமணி சீராளன்)
மலராக: 03. 08. 1977 வீரச்சாவு: 11. 11. 1993

"வீரத்தின் விளைநிலமாம் தமிழீழத்திருமண்ணில் இன்பருட்டியில்"

வீரத்தாய் இரத்தினேசுவரி, சண்முகசுந்தரனார் பெற்றெடுத்த முத்தனைய வீரத்திருமகனே வெங்கடேசு!
அறுபத்தி எட்டாம் ஆண்டினிலே உதித்திட்டாய் ஈரெட்டு வயதினிலே இணைந்திட்டாய் புலிகளுடன் விடுதலைப் புலிகளின் ஆறாம் அணியினிலும், கடற்புலிகளின் முதலாம் அணியினிலும் பயிற்சி பெற்றுத் தேர்ச்சியுற்றாய் திறமான ஓட்டியாய் முன்னணி கடற்புலியாய் இருந்திட்டாய் எண்பத்தி எட்டுதனில் இந்திய இராணுவ இரண்டர்கள் சுற்றி வளைக்கையிலே தானே தன் கைக்குண்டால் தன்னையே அழித்திட்டாய் வீரத்தை விளைத்திட்டாய்.

வீரத்தாய் இரத்தினேசுவரி, சண்முகசுந்தரனார் பெற்றெடுத்த முத்தனைய வீரத்திருமகளே பாமா!
எழுபத்தி ஓராம் ஆண்டினிலே உதித்திட்டாய் ஈரொம்பது வயதினிலே இணைந்திட்டாய் புலிகளுடன் இதய பூமிதனில் பயிற்சியினை திறம்படவே முடித்திட்டாய் கோட்டை, பலாலி, கட்டுவன் ஆனையிறவென்னும் களம் பல கண்டாய், வீரத்தின் விளக்கமாய் நின்றாய் கடற்புலிகள் மகளிர் அணியினிலே துணைத் தளபதியாய் பூநகரி, நாகதேவன்துறை கடற்படைத் தளத்தினிலே களம் புகுந்தாய் எதிரியின் நீருந்து விசைப் படகைக் கைப்பற்றி எம் கையளித்தாய் இரண்டாம் நாள் சமரினிலே வீரச்சாவெய்திட்டாய்.

வீரத்தாய் யோகமலர், நடனசிகாமணியார் பெற்றெடுத்த முத்தனைய வீரத்திருமகனே கற்பகனே!
எழுபத்தி ஏழாம் ஆண்டினிலே உதித்திட்டாய் ஈராறு வயதினிலே இணைந்திட்டாய் புலிகளுடன் சிலாவத்துறை, ஆனையிறவு, கட்டைக்காடு, பலாலியென இரண்டாம் ஈழப்போர் தனிலே களம்பலவும் கண்டிட்டாய், தொண்ணூற்றி ஓராம் ஆண்டினிலே கடற்புலியில் கலந்திட்டாய் பூநகரி, நாகதேவன்துறையினிலே முன்நின்றுபோரிட்டாய் முதலாம் நாள் சமரினிலே வீரச்சாவெய்திட்டாய்.

தமிழீழத்தின் தவப்புதல்வர்களே நீவிர்
நிலையிலா வாழ்வுதனை நிலைபெறச் செய்து விட்டீர்!

விடுதலைப் பயிருக்கு உரமிட்டீர்! வீரத்தை விளைத்து விட்டீர்!
விடிவுக்காய் வித்தானீர்! ஆம் தமிழீழத்தின் விடிவுக்காய் வித்தானீர்!

இன்று எமதில்லத்தில் நடக்கும் ஆத்மா சாந்தி நிகழ்வில் பங்கு கொண்டு மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பர்களையும், போராளிகளையும் அழைக்கின்றோம்.

இன்பருட்டி,
அல்வாய் வடக்கு, அல்வாய்.

(சி-7003)

- குடும்பத்தினர்

## 45-ம் நாள் நினைவலைகள்



தாயின் மடியில்
1972.11.14

தாயக மண்ணில்
1993.11.11

11-11-93 அன்று பூநகரி - நாகதேவன் துறை இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவெய்திய

**வீரவேங்கை இனியவன்**
(பாலரட்னம் உமாச்சந்திரன்)

தவளையென தலைவனிட்ட தாணையிலே இணையாகி
தாயகத்து மண்மீட்பே தனது மன நினைவாகி
தாவிவந்த சிங்களத்துப் படைகளோடு போராடி
தமிழீழம் மீளுமென்ற உணர்வினொடு கவிபாடி
தளர்வின்றி தன்னுயிரை தமிழீழ மண்ணோடு
உறவாக்கி
தமிழ்மறவன் இனியவன் சென்றவழி தொடர்ந்
திடுவோம்.

இவருடன் பூநகரி நாகதேவன்துறைக் கூட்டுப் படை இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள். இன்று 25-12-93 சனிக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் சக போராளிகளையும், உற்றார், உறவினர், நண்பர்கள், மாவீரர் குடும்பத்தினர். போராளி குடும்பத்தினர் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உன் நினைவில் வாழும்
குடும்பத்தினர்

40, சாஸ்திரியார் லேன்
அரியாலை.

(இ)

### சிந்தனைக்கு

ஒரு மனிதனுக்கு சுதந்திரத்தைத் தருவது அவனுடைய வசதி வருவாய் பெருச்கம் அன்று; அவனுடைய தேவைகளின் சுருக்கமே ஆகும்.

- வில்லியம் காபெட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 25-12-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

# ஆத்திரப்படுவதற்கு எதுவுமில்லை!

“இந்நாடு - சிறிலங்கா - தற்பொழுது உலக வங்கியின் சட்டைப் பைக்குள் போய்விட்டது. டாலர் நோட்டுக் குறித்த பைத்தியக்காரத்தனம் எமது நாட்டில் தான் அதிகமாக இருக்கின்றது’’ இவ்வாறு மக்கள் முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா சுகாதார அமைச்சிற்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அரசாங்கத்தின் போக்கை கண்டனம் செய்தார்.

தினேஷ் குணவர்த்தனாவின் இக் குற்றச்சாட்டானது முற்றும் உண்மையானது. சிறிலங்கா அரசாங்கம் இன்று தனது பொருளாதார இறைமையை முற்றாக உலக வங்கியிடமும் தமக்கு நிதி உதவி வழங்கும் நாடுகளிடமும் இழந்துள்ளது என்று எவரும் கூறுவதில் தப்பில்லை. இதன் காரணமாக, அவர்கள் போடும் தாளத்திற்கு சிறிலங்கா ஆட வேண்டியதும் தவிர்க்க முடியாதது ஆகின்றது.

சிறிலங்கா அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கிய போதே அது சர்வதேச நிதி நிறுவனங்களின் செல்வாக்கிற்கு உட்படப் போவது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கும் எனப் பலராலும் எதிர்வு கூறப்பட்டது தான். ஆனாலும், பத்து வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வரும் போரானது, சிறிலங்கா அரசாங்கத்தை முழுமையாக உலக நிதி நிறுவனங்களிடம் சரணடைய வைத்துள்ளது என்பதே உண்மையாகும்,

சிறிலங்கா அரசு இன்று யுத்தத்திற்கெனச் செலவிடுவது சிறிய தொகையல்ல. இவ்வருடம் 2500 கோடி ரூபாவிற்கு மேல் செலவீடு செய்துள்ளது. இத் தொகை, அடுத்த வருடத்தில் 3, 000 கோடி ரூபாவை திட்டவட்டமாக தாண்டிச் செல்லும் என்பதே பலரதும் கணிப்பீடாகும். மூன்றாம் உலக நாடுகளில் ஒன்றான சிறிலங்காவில் இத் தொகையைத் திரட்டுவதென்பது இலகுவானதொருகாரியமல்ல.

இந்த நிலையில், சிறிலங்கா அரசாங்கத்திற்கு, மக்களின் சேவைக்கென ஒதுக்கப்படும் மானியங்களை

# வலதுகையால் வழங்கிய அதிகாரம் இடதுகையால் பறிக்கப்பட்டது

## மாகாணசபை நிலை குறித்து சரத்கொங்ககே

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட சில அதிகாரங்கள் பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்துடன் முன் வைக்கப்பட்ட சம அட்டவணையின் மூலம் (கொன்கரன் லிஸ்ட்) மத்திய அரசுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இது வலது கையால் கொடுத்து அதனையே இடது கையால் பறிப்பதற்கு ஒப்பானதாகும் இவ்வாறான தொரு அதிகாரப் பலவலாக்கலுக்கு வடக்கு கிழக்கைச் சேர்ந்த அமைப்புக்கள் ஏன் இணக்கம் தெரிவித்தன? இவ்வாறு மத்திய மாகாண சபையின் சபாநாயகர் சரத்கொங்ககே அண்மையில் கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியின் போது கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், அதிகாரப் பரவலாக்கம் ஜனநாயகத்திற்கான அத்தியாவசியமான அம்சம் ஆகும். உண்மையில்மாகாண சபைகளுக்கு சரியான அதிகாரம் வழங்கப்படவில்லை. காணிப் பிரச்சினை போன்ற முக்சிய விடயங்களில் கூட மாகாணசபைகளுக்கு அதிகாரமளிக்கப்படவில்லை மலையகத் தோட்டத்தொழிலாளர்களைத் பொறுத்த வரையில் அவர்களது வாக்குகளைப் பெற்று நாம் பதவிக்கு வந்துள்ள போதிலும் கூட அவர்களது பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாதுள்ளது ஏனெனில் தோட்டத்துறை எமக்கு சொந்தமில்லை அங்குள்ள வைத்தியசாலை எமக்குச் சொந்தமில்லை பாடசாலைகள் சரியான முறையில் எமக்கு சொந்தமில்லை ஆனால் மக்கள் எமக்குச் சொந்தம் அவர்களது பிரச்சினை எமக்குச்சொந்தம் என்ற நிலையே காணப்படுகின்றது

அத்துடன் ‘ சிங்கள பௌத்தர்கள் என்ற ரீதியில் தொண்டமானின் ஜனநாயகத் தலைமையை பாதுகாப்பது அவசியமானதாகும் காமினி ஜயசூரிய போன்றோர் கூறுவதைக்கேட்டு இப்பிரச்சினையை வெறும் வாக்குப் பிரச்சினையாக நோக்கப்பட்டால் அது சிங்கள இனத்திற்கு செய்யப்படும் துரோகமாகவே இருக்கும் எனவும் தெரிவித்தார்

### பொறுப்புக்களை

வெற்றி பெறலாம் என்றும் அரசு நம்புகிறது. இதன் மூலம் தெரிந்து கொள்வது என்னவென்றால், அரசு இனப்பிரச்சினை குறித்து தவறான புரிந்துணர்வைக் கொண்டிருக்கிறது என்பதே என்றும் அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மண்கிண்டிமலை, கட்டைக்காடு ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவத்தின் மீதான புலிகளின் தாக்குதல்களும், அண்மையில் பூநகரியில் புலிகள் மேற்கொண்ட பாரிய தாக்குதல்களும் வடக்கு-கிழக்கு நிலைமை பற்றியும் சிங்கள மக்களைச் சிந்திக்க வைத்திருக்கிறது. இதற்குப் "பொறுப்பான இராணுவ அதிகாரிகள் பதவி விலக வேண்டும், அல்லது பதவியிலிருந்து விலக்கப்படவேண்டும் என்ற அபிப்பிராயத்தையும் சிங்கள மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது. இது யுத்தத்திற்கு எதி

# உள்ளூராட்சி ஒய்வூதியர் கொடுப்பனவில் தாமதம்

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் உள்ளூராட்சித் திணைக்களத்தைச் சேர்ந்த ஒய்வூதியர்கள் தமக்குரிய டிசம்பர் மாதத்திற்கான ஒய்வூதியத் தொகைகளை பெறவியலாது திண்டாடுகின்றனர்.

வடபகுதிக்கு கப்பல் மூலம் தபால் எடுத்து வரப்படுவதில் அடிக்கடி நேரும் தாமதங்கள் காரணமாகவேஉள்ளூராட்சி திணைக்கள ஒய்வூதியர்கள் தமது ஒய்வூதியத்தை பெற முடியாது திண்டாடுகின்றனர் கடந்த வருடத்திலும் நவம்பர், டிசம்பா மாதங்களுக்கான ஒய்வூதியக் கொடுப்பனவுகள் 93 பெப்பிரவரி மாதத்திலேயே வழங்கப்பட்டது என்பது தெரிந்ததே.

# ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் பலத்த மழையால் பெரும் பாதிப்பு

(லண்டன்)

ஐரோப்பாவில் பல பகுதிகளிலும் பலத்த மழையும், பனியும் பெய்துகொண்டிருக்கிறது. கடந்த நூற்றாண்டுக்குள் இப்பகுதியில் பெய்யும் கடும் மழையால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போலந்து நாட்டில் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. போலந்து பாதுகாப்புப் படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஜெர்மனியில் ரயின் நதிப் பகுதியில் பெய்த கடும் மழை குறைந்துள்ளது. ஆனால் கொலோன் பகுதிகளில் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பிரான்சிலும், பெல்ஜியத்திலும் சில பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிறிஸ்மஸ் பண்டிகைகொண்டாட்டங்கள் மந்தநிலையில் இருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன.

# வெள்ளத்தால் பாதிப்புற்ற கிளி. மக்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் உடனடி உதவிகளை வழங்கி வருகின்றன. பாதிக்கப்பட்ட 6,000க்கு அதிகமானவர்களுக்கு உடுப்பு, உணவுவகைகளையும், மருந்து வகைகளையும்வழங்குவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன. சிரமதான அடிப்படையில் பல அணைக்கட்டுகளும் செப்பனிடப்பட்டு வருகின்றன.

# கூட்டுறவு ஊழியர்களுக்கு சம்பளஉயர்வு கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

அரச ஊழியர்களுக்கு 1993 ஜனவரியில் இருந்து வழங்கப்பட்ட 30 வீதம் சம்பள உயர்வு கூட்டுறவு ஊழியர்களுக்

கொண்டிருக்கும் முயற்சியின் பயனாக அதற்கான அனுமதியும் சுற்று நிருபமும் விரைவில் கிடைக்க உள்ளதாக மேற்படி தொழிற்சங்க வட்

# இந்திய நிதியமைச்சர் மன்மோகன்சிங் ராஜினாமா

நரசிம்மராவ் அரசின் நிதி அமைச்சர் மன்மோகன் சிங் தனது ராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்துள்ளார். பம்பாய் பங்குச்சந்தை மோசடிக்குப் பொறுப்பேற்றே நிதி அமைச்சர் தனது ராஜினாமாவை சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் இடம் பெற்ற பம்பாய்பங்குச்சந்தை மோசடியை விசாரித்த பாராளுமன்றக் குழு நிதி அமைச்சை வன்மையாக விமர்சித்ததை அடுத்தே மன்மோகன் சிங் பதவிவிலக முன்வந்துள்ளதாக டில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதமர் பி. வி- நரசிம்மராவ் அவரின் பதவிவிலகலை ஏற்றுள்ளாரா இல்லையா என்பது பற்றித் தெரியாத நிச்சயமின்மை நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மன்மோகன்சிங் 1991இல் பி. வி. நரசிம்மராவ் அமைச்சரவையில் சேர்ந்து கொண்டவர்.

# வீரப்பனின் சகாக்கள் இருவர் சுட்டுக்கொலை

(டில்லி)

தமிழ்நாடு கர்நாடக எல்லையோரத்திலுள்ள சத்திய மங்கலம் காட்டுப் பகுதியில் தேடுதல் பணியை மேற்கொண்ட சிறப்புக் காவல் படையினருடன் வீரப்பனின் குழுவினர் மோதியதாகக் கூறப்படுகிறது இந்த மோதலைத் தொடர்ந்து வீரப்பனின் குழுவைச் சேர்ந்த இருவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்ததாகவும், இரண்டு துப்பாக்கிகளும், நாற்பது சுற்றுத் தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டதாகவும் காவல் துறையின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# சீருடை வழங்கப்பட்டது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட புலோலி உப அலுவலகம் குடத்தனை உப அலுவலகம் செம்பியன் பற்று உப அலுவலகம், பிரதேச சபை தலைமைக்காரியாலயம் ஆகிய அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கான கடமை நேர சீருடைகளைப்பருத்தித்துறைபிரதேசசபை வழங்கியுள்ளது,

(25)

# சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கடைக்கு முன்னால் சைக்கிளை நிறுத்தியவர் உள்ளே சென்று வருவதற்குள் சைக்கிள் திருட்டுப்போய்விட்டது‘ நேற்றுமாலை ‘மின்சார நிலைய வீதியில் உள்ள அழகு சாதனப் பொருள்கள் விற்கும் கடையொன்றில் பணிபுரியும் பா. ஸ்ரீஸ்கந்தராசா என்பவரின் புத்தம் புதிய லுமாலா சைக்கிளே இவ்வாறு ‘கண்ணிமைக்கும்’ நேரத்திற்குள் திருடப்பட்டுள்ளது. இக் கடையில் பொருள்கள் வாங்க மக்கள் கூட்டமாக நின்றதை சாதகமாக்கியே திருடன் தனதுகைவரிசையைக் காட்டியுள்ளான்.

# சோலைவரி நிறுத்தம் பணிகள் பாதிப்பு

ஆட வேண்டியதும் தவிர்க்க முடியாதது ஆகின்றது.

சிறிலங்கா அரசாங்கம் திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கிய போதே அது சர்வதேச நிதி நிறுவனங்களின் செல்வாக்கிற்கு உட்படப் போவது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்கும் எனப் பலராலும் எதிர்வு கூறப்பட்டது தான். ஆனாலும், பத்து வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வரும் போரானது, சிறிலங்கா அரசாங்கத்தை முழுமையாக உலக நிதி நிறுவனங்களிடம் சரணடைய வைத்துள்ளது என்பதே உண்மையாகும்.

சிறிலங்கா அரசு இன்று யுத்தத்திற்கெனச் செலவிடுவது சிறிய தொகையல்ல. இவ்வருடம் 2500 கோடி ரூபாவிற்கு மேல் செலவீடு செய்துள்ளது. இத் தொகை, அடுத்த வருடத்தில் 3,000 கோடி ரூபாவை திட்டவட்டமாக தாண்டிச் செல்லும் என்பதே பலரதும் கணிப்பாகும். மூன்றாம் உலக நாடுகளில் ஒன்றான சிறிலங்காவில் இத் தொகையைத் திரட்டுவதென்பது இலகுவானதொருகாரியமல்ல.

இந்த நிலையில், சிறிலங்கா அரசாங்கத்திற்கு, மக்களின் சேவைக்கென ஒதுக்கப்படும் மானியங்களை வெட்டுவதையும், அரச உடைமைகளாக உள்ள சொத்துக்களையும் விற்பனை செய்து நிதி சேகரிப்பதையும் தவிர வேறு வழியில்லை. இதனையே இன்று சிறிலங்கா அரசு செய்தும் வருகின்றது. இதேவேளை இச் செயற்பாடானது சிறிலங்காவிற்கு உதவும் நிதி நிறுவனங்களுக்கும், உலக நாடுகளுக்கும் பெரிதும் உவப்பானவையாகும்.

ஏனெனில், அரச செலவீனத்தைக் குறைக்குமாறும், மானியங்களில் பெரும் வெட்டை ஏற்படுத்துமாறும், தனியார் மயப்படுத்துமாறும், உலக நிதி நிறுவனங்கள் சிறிலங்கா அரசிற்கு எப்பொழுதும் வற்புறுத்தியே வந்துள்ளன. இதன் மூலம் சிறிலங்காவின் பொருளாதாரத்தில் முழுமையாகக் காலூன்றிக் கொள்வதே அவற்றின் திட்டமாகும்.

ஆனால், மக்கள் முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா போன்றவர்களால் இதனை எவ்வாறு கண்டிக்க முடியும் என்பதே கேள்வி ஆகும். ஏனெனில், போரைத் தொடர்ந்து அரசாங்கம் நடத்தியே வர வேண்டும் என வற்புறுத்துபவர்களில் தினேஷ் குணவர்த்தனா முன்னணியில் உள்ளவராவார். ஆகையினால் போருக்கான செலவீட்டையும், ஆயுதக்கொள்வனவிற்கான டாலரையும் வெளிநாட்டு நிதிநிறுவனங்களின் நிபந்தனைகளுக்குப் பணியாமல் எவ்வாறு சிறிலங்கா அரசாங்கத்தால் திரட்டமுடியும்? மானியங்களை வெட்டாமல் வேறு எதைச்செய்யமுடியும்? சிறிலங்கா என்ன பெற்றோலிய வயல்களையா கொண்டுள்ளது, தேவையான டாலர்களை விரும்பியவாறு பெற்றுக்கொள்ள?

அதாவது போரை நடத்துவதானால் அந்நிய நிதி நிறுவனங்களிடம் மண்டியிட வேண்டும். அவர்களின் நிபந்தனைகளுக்குப் பணியவேண்டும். அவ்வாறு பணியாவிட்டால் போரை நடத்துவதென்பது சாத்தியமாகப் போவதில்லை. ஆயுத தளபாடக் கொள்வனவுக்குத் தேவையான பலகோடி டாலர்கள் கிடைக்கப்போவதுமில்லை.

ஆனால், சிங்கள அரசியற் தலைவர்களைப் பொறுத்து போரே முதன்மையானது என்ற நிலையே உள்ளது. இந்நிலையில், சிறிலங்காவை அடைவு வைத்துத்தான் ஆக வேண்டும். அதாவது அந்நியரிடம் நாடு போனாலும் பரவாயில்லை போரை நடத்தியே ஆகவேண்டுமெனில் உலக வங்கியின் சட்டைப்பைக்குள் சிறிலங்கா போவதுதவிர்க்க முடியாததுதான். இதில் தினேஷ் குணவர்த்தனா ஆத்திரப்படுவதற்கு ஏதுமில்லை.

அரசு நம்புகிறது. இதன் மூலம் தெரிந்து கொள்வது என்னவென்றால், அரசு இனப்பிரச்சினை குறித்து தவறான புரிந்துணர்வைக் கொண்டிருக்கிறது என்பதே என்றும் அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மண்கிண்டிமலை, கட்டைக்காடு ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவத்தின் மீதான புலிகளின் தாக்குதல்களும், அண்மையில் பூநகரியில் புலிகள் மேற்கொண்ட பாரிய தாக்குதல்களும் வடக்கு-கிழக்கு நிலைமை பற்றியும் சிங்கள மக்களைச் சிந்திக்க வைத்திருக்கிறது. இதற்குப் 'பொறுப்பான இராணுவ அதிகாரிகள் பதவி விலக வேண்டும், அல்லது பதவியிலிருந்து விலக்கப்படவேண்டும் என்ற அபிப்பிராயத்தையும் சிங்கள மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது. இது யுத்தத்திற்கு எதிரான அபிப்பிராயத்தை நன்கு சிந்திக்கும் மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது. யுத்தத்தை உடன் நிறுத்தவேண்டும் என்ற எண்ணத்தையும் தோற்றுவித்துள்ளது என்று அவர் அக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## தொண்டமானின்

என்பதையே காட்டுகிறது. ஐம்பத்திமூன்று ஆண்டுகளாக கட்சி பல இலட்சம் ஆதரவாளர்களைக் கொண்டுள்ளது. தொடர்ந்து பல ஆண்டுகளாக வேலைத்திட்டங்களில் கணிசமான உரிமைகளைப் பெற்றுக்கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியுடன் உறவு கொண்டுள்ள இ. தொ. கா. ஏன் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசநாயக்காவிற்கு ஒத்துழைப்பு வழங்க முடிவு செய்தது என்பது எனக்கு ஆச்சரியமான விடயமாக உள்ளது.

காமினி திசநாயக்காவிற்கும் ஐ, தே, க விற்கும் இடையே உள்ள பிரச்சினையை அவர்களுக்குள்ளேயே தீர்த்துக் கொள்ளும்படி கூறிவிட்டு நாம் அரசாங்கத்துடன் இணைந்து எமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நுவரெலியா மாவட்டத்தில் சென்ற சில தினங்களாக நடைபெற்ற வேலை நிறுத்தம் தொடர்பாக விசாரணைக் கமிசன் ஒன்று அமைக்கப்படும் என தொண்டமான் குறிப்பிட்டுள்ளார் ஆனால் ஏழு உறுப்பினர்களும் கடத்தப்பட்டனர் என்று தெரிந்ததும் தொண்டமானின் தலைமையிலேயே வேலை நிறுத்தம் குறித்து முடிவுசெய்யப்பட்டது இரகசியமானது அல்ல எனவே இந்த விசாரணைகுழு தலைவர் தொண்டமான் மீதே விசாரணை நடத்தும் என்றார்.

களிலும் பலத்த மழையும், பனியும் பெய்துகொண்டிருக்கிறது. கடந்த நூற்றாண்டுக்குள் இப்பகுதியில் பெய்யும் கடும் மழையால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போலந்து நாட்டில் வடக்கு மற்றும் மேற்குப் பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. போலந்து பாதுகாப்புப் படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

குறைந்துள்ளது. ஆனால் கொலோன் பகுதிகளில் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பிரான்சிலும், பெல்ஜியத்திலும் சில பகுதிகள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிறிஸ்மஸ் பண்டிகைக்கொண்டாட்டங்கள் மந்தநிலையில் இருப்பதாகச் செய்திகள் வந்திருக்கின்றன.

# வெள்ளத்தால் பாதிப்புற்ற கிளி. மக்களுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் உடனடி உதவிகளை வழங்கி வருகின்றன. பாதிக்கப்பட்ட 6,000க்கு அதிகமானவர்களுக்கு உடுப்பு, உணவுவகைகளையும், மருந்து வகைகளையும்வழங்குவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன. சிரமதான அடிப்படையில் பல அணைக்கட்டுகளும் செப்பனிடப்பட்டு வருகின்றன.

# கூட்டுறவு ஊழியர்களுக்கு சம்பளஉயர்வு கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

அரச ஊழியர்களுக்கு 1993 ஜனவரியில் இருந்து வழங்கப்பட்ட 30 வீதம் சம்பள உயர்வு கூட்டுறவு ஊழியர்களுக்கும் கிடைக்க உள்ளதாக தெரிய வருகிறது அரச ஊழியர்களுக்கு 1993 சனவரியில் இருந்து வழங்கப்பட்ட 30 வீத சம்பள உயர்வு கூட்டுறவு ஊழியர்களுக்கும் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் வடகிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் வடகிழக்கு மாகாண வேலையாளர் ஆணைக்குழுவின் ஊடாக எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சியின் பயனாக அதற்கான அனுமதியும் சுற்று நிருபமும் விரைவில் கிடைக்க உள்ளதாக மேற்படி தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன அத்துடன் மேற்படி தொழிற் சங்கத்தின் முயற்சியினால் 01-01-1988ற்கு பிற்பட்ட கூட்டுறவு ஊழியர்களிற்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த முன்னூற்று பதின்நான்கு ரூபா படியை நிலுவையுடன் வழங்க அனுமதி பெற்று அதற்கான சுற்றுநிருபமும் யாழ்ப்பாணம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (88)

# விவசாய மன்னர் போட்டி நடத்துவதுபற்றி ஆராய்வு

தமிழீழ பகுதிகளில் நெல் விளைச்சலை ஊக்குவிக்கும் பொருட்டு விவசாய மன்னர் போட்டியை நடத்துவதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் திட்டமிட்டுள்ளது

த- பொ- மே- நிறுவனத்தால் ஆண்டு தோறும் நடாத்தப் பட்டு வரும் வதிவிட வேளாண்மை போட்டி சம்பந்தமான விசேட கலந்துரையாடல் ஒன்று இந்நிறுவனத்தின் யாழ் மாவட்ட கேட்போர் கூட மண்டபமான பொன்னம்மான் கருத்தரங்கு மண்டபத்தில் கடந்த வியாழன் நடைபெற்றது வதிவிடத்திலேயே தோட்ட செய்கையுடன் கால் நடைகளையும் வளர்க்கும் இப் போட்டியில் இம்முறை கூடுதலானோரை ஈடுபட செய்வது பற்றி கூடுதலான கவனமெடுத்து ஆராயப்பட்டது அத்துடன் விதை உருளைக் கிழங்கு விநியோகம் பற்றியும் இவ் விநியோகத்திற்கு த- பொ- மே- நிறுவனத்தால் வழங்கப்பட்டு வரும் கமக்காரர் அடையாள அட்டையின் அவசியம் பற்றியும் வலியுறுத்தப்பட்டது

வட தமிழீழத்திலுள்ள நெற்செய்கை நிலப்பரப்பு முழுவதையும் முழு முயற்சியுடன் பயன்படுத்தினால் வட தமிழீழத்தின் நெற் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் இந்த இலக்கை அடைவதற்காக நெற் செய்கையில் அதிக விளைச்சலைப் பெற கமக்காரரை ஊக்குவிப்பதற்கென விவசாய மன்னர் போட்டி நடாத்தப்படவுள்ளது இப்போட்டி பற்றியும் வதிவிட வேளாண்மைப் போட்டிதொடர்பானவிசேட கலந்துரையாடலில் ஆராயப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்

# 3 கோட்டங்களும் இயங்குகின்றன

(பருத்தித்துறை)

வடமராட்சியில் மூன்று கோட்டக்கல்வி அலுவலகங்கள் செயற்படத் தொடங்கியுள்ளன. இதற்குமுன்னர் வடமராட்சியில் ஒரு கோட்டக் கல்வி அலுவலகமே இயங்கி வந்தது. தற்போது பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக இக்கல்வி அலுவலகங்கள் செயற்படத் தொடங்கியுள்ளன. (25)

# திருட்டு

(யாழ்ப்பாணம்)

கடைக்கு முன்னால் சைக்கிளை நிறுத்தியவர் உள்ளே சென்று வருவதற்குள் சைக்கிள் திருட்டுப்போய்விட்டது' நேற்றுமாலை 'மின்சார நிலைய வீதியில் உள்ள அழகு சாதனப் பொருள்கள் விற்கும் கடையொன்றில் பணிபுரியும் பா. ஸ்ரீஸ்கந்தராசா என்பவரின் புத்தம் புதிய லுமாலா சைக்கிளே இவ்வாறு 'கண்ணிமைக்கும்' நேரத்திற்குள் திருடப்பட்டுள்ளது. இக் கடையில் பொருள்கள் வாங்க மக்கள் கூட்டமாக நின்றதை சாதகமாக்கியே திருடன் தனதுகைவரிசையைக் காட்டியுள்ளான்.

# சோலைவரி நிறுத்தம் பணிகள் பாதிப்பு

யாழ். மாநகர சபையினால் அறவிடப்படும் சோலைவரி தற்சமயம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளமையை அடுத்து அதன் அபிவிருத்திப் பணிகள் பெரிதும்பாதிக்கப்பட்டுள்ளன

அண்மைக் காலங்களில் யாழ். மாநகர சபை அறவிடுகின்ற சோலைவரியைக் கொண்டு அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வந்தது.

ஆனால் தற்சமயம்மேற்படி சோலைவரி அறவிடலை கொழும்புநீதிமன்றம் நிறுத்தி வைத்திருப்பதனை அடுத்து இவ்அபிவிருத்திப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார். (பா)

குணப்படுத்தக்கூடிய நோயினால்

# வருடாந்தம் 10 இலட்சம் சிறுவர்கள் உயிரிழப்பு

உலகில் ஆண்டு தோறும் பல லட்சக்கணக்கான சிறுவர்கள் தடுக்கக் கூடிய நோய்களினால் உயிரிழந்து வருவதாக ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் தெரிவித்துள்ளது.

பணத்தட்டுப்பாடு, கல்வி அறிவு இல்லாமை, பட்டினி, போஷாக்கு இன்மை என்பன இதற்கான காரணங்கள் என சிறுவர் நிதியம் கூறுகின்றது.

1980-ம் ஆண்டில் 25 லட்சம் சிறுவர்கள் இவ்வாறு பலியாகினார்கள் இன்றும் பத்து இலட்சத்திற்கும் சற்று குறைவான சிறுவர்கள் இவ்வாறு இறக்கின்றனர் சில வேளைகளில் போதியளவு மருந்து வகைகளும்வசதிகளும் இருந்தும் இந்த அளவில் சிறுவர்கள் இறப்பதுகுறித்து சகல உலக நாடுகளும் தமது கவனத்தை செலுத்த வேண்டுமென நிதியம் கேட்டுள்ளது.

# கெயிற்றி ஆட்சியாளருக்கு எதிராக பொருளாதாரதடை

(வாஷிங்டன்)

கெயிற்றியின் இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராக மீண்டும் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படலாமென அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது. ஐ. நா சபையுடன் கெயிற்றி செய்து கொண்ட ஒப்பந்தப்படி அடுத்த மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக இராணுவ ஆட்சியைக் கைவிட்டு ஜனநாயக முறைப்படி ஆட்சியை ஒப்படைக்க வேண்டுமெனவும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. நான்கு நாடுகளின் இராணுவத் தலைவர்களை சந்தித்துப் பேச கெயிற்றியின் இராணுவ ஆட்சியாளர்கள் மறுத்ததை தொடர்ந்து அமெரிக்கா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

உருவாகும் வாரிசுகளுக்கு
உயிலாக மரம் வைப்போம்

அகில இலங்கை இளங் கலைஞர் மன்றம்

## மாதாந்த இசை நிகழ்ச்சி

**"ஒளிவிழா"** (பரமன் கிறீஸ்து பிறப்பு விழா)

இடம்: மன்றக் கலாமண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர்

காலம்: 26-12-1993 ஞாயிறு மாலை 5மணி

### நிகழ்ச்சி நிரல்

மாலை 5.00 — 6-00 1) மங்கள இசை —
வி. கே. கானமூர்த்தி ) குழுவினர்
வி. கே. பஞ்சமூர்த்தி )

மாலை 6 00 — 7.30

2) மங்கள விளக்கேற்றல்;-
1. சித்தவைத்தியர் க. இராமசாமி அவர்கள்
2. அ. ஜேசுதாஸன் (அருளாஸ் தொழிலகம்) அவர்கள்

3) மௌன அஞ்சலி
4) வரவேற்புரை
5) வழிபாடு:- புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி யாழ்ப்பாணம்
6) தலைமையுரை :- அருட்தந்தை லூயிஸ் பொன்னையா அ. ம. தி. (அமல உற்பவம் கொழும்புத்துறை)
7) அருளுரை:- அருட்தந்தை செ பி. நேசகுமார் (பரியோவான் ஆலயம், சுண்டுக்குளி)
8). பாடல்;- சா. தேவமனோகரி ச. டிசிலியா ச. புனிதவதி சு கனிசியா ஜி சஜினி
9) வாழ்த்துரை:- கவிஞர் சோ. பத்மநாதன் (உப அதிபர் பலாலி ஆசிரிய கலாசாலை)
10) பாடல்:- க. சாளா ஜே. ஸ்கொலஸ்ரிக்கா வ. கோஷிடொறததி மகிழினி விஜி
11) பிரதம விருந்தினர் உரை.- அருட்தந்தை எஸ். எச். ஜெபநேசன் (இயக்குனர், மனித முன்னேற்ற நிலையம்)

7 30 — 8.15

ஆக்க நடனம்:- 'தேவனின் பெருமை'' (இராமநாதன் நுண்கலைக் கல்லூரி)

8 15 — 9.30

நாடகம்:- ''சத்தியத்தின் தரிசனங்கள்'' (தயாரிப்பு:- திருமறைக்கலா மன்றம்)

**விக்ரேஸ், நியூவிக்ரேஸ், விக்ரர் அன் சன்ஸ் ஸ்தாபனங்களின் ஆதரவில் கலா ரஸிகர்கள் அனைவரையும் ஒளி விழாவிற் கலந்துசிறப்பிக்குமாறு**

**அன்புடன் அழைக்கின்றோம் !**

குறிப்பு: இளங்கலைஞர் மன்ற 14-வது ஆண்டு இசை விழா 6-2-94— 20 2-94 வரை பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது. இசைவிழாவில் கலந்து நிகழ்ச்சிகள் வழங்க விரும்பும் இளங்கலைஞர்களிடமிருந்து வாய்ப்பாட்டு வயலின், வீணை. மிருதங்கம் புல்லாங்குழல் என்பவற்றில் தனி குழு நிகழ்ச்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்கள் தகுதியை உறுதி செய்து 10-1-94 திகதிக்கு முன்னர் தலைவர் இளங்கலைஞர் மன்றம் சட்டநாதர் வீதி, நல்லூர் என்றமுகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேற்படி
மன்றத்தினர்.

(சி-8198)


## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

## 24-12.93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- —11748

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்;- இல்லை

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

41-8823, 22-4895, 43-6657, 42-5080, 28-1731
28-3303, 26-0139, 41-9112, 27-2977, 40-1655
24-5533, 26-0338, 26-5963, 40-4225, 26-5097
26-4792, 26-0767, 28-2145, 28-3141, 27-3788
26-1919, 27-6584, 27-1255, 26-3650, 24-9758,
27-3946, 41-9454, 27-8879, 24·6639.


பூநகரி தவளை தாக்குதலின் போது வீரச்சாவடைந்த லெப். வேந்தன் அவர்தம்

### 45ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில் அரும்பாய்;
01 · 01 · 1961

தமிழ் மண் மடியில் வித்தாய்;
11 · 11 · 1993

**லெப். வேந்தன்**
**(சுப்பையா பேரின்பமூர்த்தி)**

மாசற்ற நெஞ்சுடையன் தமிழீழ தேசத்தின் காதலினால்
பேசத்தகுந்த பெரும் பணி புரிந்தான் - பேசுங்கால்
லெப். வேந்தன் (பேரின்பமூர்த்தி) தமிழீழ தேசத்தின் மீட்சிக்கே
தனை ஈகஞ்செய் திணைந்தான் தாய் மண்.

25-12-93 இன்று நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மந்துவில் மேற்கு, கொடிகாமம்.
திரு திருமதி சுப்பையா குடும்பத்தினர்

(6955)


## யாழ், மாநகர எல்லைக்குள் வைத்தியசாலை அமைப்பு

(நமது நிருபர்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வைத்தியசாலைகளை உருவாக்க யாழ் மாநகரசபை பரிசீலித்து வருகின்றது என யாழ் மாநகரசபை அணையாளர் எமது நிருபருக்கு தெரிவித்தார்.

இதன்படி யாழ். மாநகர சபை அதன் எல்லைக்குட்பட்ட நாவாந்துறை, அரியாலை போன்ற பகுதிகளில் இந்த வைத்திய சாலைகளை உருவாக்குவதற்கான பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பு மாநகரசபை அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வட்டாரத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் வைத்தியசாலைகளை உருவாக்கி நிர்வகித்து வருகின்றது என அவர் தெரிவித்தார் (பா)

## மண்சுவர் இடிந்து வீழ்ந்து தந்தையும் மகளும் பலி

(தொல்புரம்)

வட்டுக்கோட்டை சங்கரத்தையில் வீடு ஒன்றின் மண் சுவர் இடி பாட்டில் சிக்கவிருந்த தந்தை அவரைக் காப்பாற்றச் சென்ற மகள் இருவரும் இடிபாட்டினுள் சிக்குண்டு மரணமானார்கள்.

கடந்த புதன்கிழமை இரவு 10-15 மணியளவில் இடம்பெற்ற இச் சோக சம்பவத்தில் சங்கரத்தை குளிப்பொன் வீதியிலுள்ள வீட்டின் மண் சுவர் இடிந்து வீழ்ந்ததில் மருதப்பிள்ளை கணபதிப்பிள்ளை (வயது 73) அவரது மகளான தேவராசா இராசேஸ்வரி (வயது 47) ஆகிய இருவருமே இடிபாட்டினுள் சிக்கி மரணமானவர்கள் ஆவர்.

மேற்படி பகுதியில் சமீப நாட்களாக பெய்த பெருமழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் வீட்டின் அகலமான சுவர் ஊறல் நிலைக்கு உள்ளானதினால் சுவர் இடிந்து விழுந்து இருவரும் பரிதாபமாக மாண்டனர் எனத் தெரிய வருகிறது. (41)

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு 11-55 மணியளவில் மூளாய், பொன்னாலைப் பகுதிகளை நோக்கி அகோர எறிகணை வீச்சினை மேற்கொண்டனர்.

இவ் எறிகணைகள் மூளாய் குடியிருப்புக்களை அண்மித்த பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. மேலும் மாதகலில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரும் சுழிபுரப் பகுதிகளை நோக்கி இதேதினம் நள்ளிரவு வேளை எறிகணை வீச்சினை மேற்கொண்டனர் எனவும் தெரியவருகிறது (41)

## எம். ஜி, ஆர் நினைவு நாள்

(வடமராட்சி)

பருத்தித்துறை எம். ஜி.ஆர் மன்ற ஆதரவாளர்களினால் இன்பருட்டியில் ஆறாவது ஆண்டு நினைவு நாள் நேற்று நடைபெற்றது. அவர் நடித்த படங்களும் காண்பிக்கப்பட்டன. (யோ)

## மானத் தமிழ்மறவன் நூல் வெளியீடு

மானத்தமிழ் மறவன் (சங்கிலியன் கூத்து) என்னும் நூல் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ் இலக்கிய வட்டத்தலைவர் து வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. மூத்த எழுத்தாளர் சொக்கன் எழுதிய இந் நூலிற்கான வாழ்த்துரைகளை தமிழீழ கல்விக் கழகப்பொறுப்பாளர் வெ. இளங்குமரன், யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம்யாழ். இந்துக்கல்லூரிமுன்னாள் உபஅதிபர் க. சிவராமலிங்கம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகப்பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையின் வெளியீட்டு உரையைத் தொடர்ந்து பேராசிரியர் அ. சண்முகதாஸ், செ. மட்றாஸ் மெயில்ஆகியோரின் ஆய்வுரைகளும் நூலாசிரியரின் பதிலுரையும் இடம்பெறும். முதற்பிரதியைமூத்த எழுத்தாளர் வரதர் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

## மன்னம்பிட்டி கிராமம் வெள்ளத்தால் பாதிப்பு

வெள்ளத்தினால் மன்னம்பிட்டி கிராமிய வீடமைப்புத் திட்டம் முற்றாகச் சேதமடைந்துள்ளது வெள்ளத்தினால் வயல்பகுதியை அண்டிய வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளன.

பல கால்நடைகள் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன 600க்கும் அதிகமான குடும்பங்கள் இப் பகுதியில் பாதிப்படைந்துள்ளன வேளாண்மையும் பாதிப்படைந்துள்ளது

கிராமிய வீடமைப்புத்திட்டம் முற்றாகப் பாதிக்கப்பட்டதை அடுத்து இடம்பெயர்ந்த மக்கள் பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

## ராஜீவ் கொலை வழக்கு ஜனவரி 19இல் விசாரணை

(டில்லி)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சாட்சிகளை விசாரிப்பது அடுத்தமாதம் 19ஆம் திகதி தொடங்கும் என்று உள்துறை இணை அமைச்சர் ராஜேஸ் பைலட் வியாழன் லோக்சபாவில்தெரிவித்தார்.

விசாரணையை விரைவாக நடத்தி முடிப்பதற்காக கொலைவழக்கை மட்டும் கவனிக்கும் பொறுப்பு சிறப்பு நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## மனித உரிமை மீறல்களில் பாக். அரசு ஈடுபடுகிறது

மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

## கருத்தரங்கு


45ஆம் நாள் வீரவணக்கமும்



45ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

கலா ரஸிகர்கள் அனைவரையும் ஒளி விழாவிற் கலந்துசிறப்பிக்குமாறு

**அன்புடன் அழைக்கின்றோம் !**

குறிப்பு: இளங்கலைஞர் மன்ற 14-வது ஆண்டு இசை விழா 6-2-94— 20 2-94 வரை பதினைந்து தினங்கள் நடைபெறவுள்ளது. இசைவிழாவில் கலந்து நிகழ்ச்சிகள் வழங்க விரும்பும் இளங்கலைஞர்களிடமிருந்து வாய்ப்பாட்டு வயலின், வீணை. மிருதங்கம் புல்லாங்குழல் என்பவற்றில் தனி குழு நிகழ்ச்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்கள் தகுதியை உறுதி செய்து 10-1-94 திகதிக்கு முன்னர் தலைவர் இளங்கலைஞர் மன்றம் சட்டநாதர் வீதி, நல்லூர் என்றமுகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேற்படி
மன்றத்தினர்.

(சி-8198)

---

## 45ஆம் நாள் வீரவணக்கமும் நினைவஞ்சலியும்

25 12-1993



புங்குடுதீவில் மலர்ந்தாய்
17-01-1966

பூநகரியில் வித்தாய்
11-11-1993

### கப்டன் பூமகள் (விஜயா)

*[செல்லையா உதயராணி]*

எம்மருமை உதயா!
விழுதுவிட்டு வேர்பரப்பி விருட்சமாய்
படர வந்த செழுமை மிகு குலமகளே
சேயிழையே, பூமகளே
உன் பிரிவுத்துயராலே உலகம் இருளானதே
சின்னவளாய் நீ வந்து சிரித்து மகிழ்ந்ததெல்லாம்
பொன்னவளே தீயாய் பொசுங்கியதே
சுற்றம், உறவு இனசனங்கள் பெற்றவர்கள்
யாபேரும் செய்த நற்றவத்தால் வந்த
எங்கள் நல் உதயாவே!
பட்டப்படிப்புதனை பாதியிலே விட்டெறிந்து
பாயும் வேங்கைப்படைதனில் நீயிணைந்தாய்
மனக்கசிவே இல்லாத காடை வெறியரைக்
களத்தினிலே நீ முடித்து, விழி கசிந்து
உருகிட பூநகரி மண்ணிலே சாய்ந்தாயோ?
பொன்மகளே விஜயாவே!
எழுந்தொருகால் வந்து எம்துயர்
துடைக்க மாட்டாயோ?

இத்தினத்தில் எமது மகளுடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவுகூருகின்றோம்.

25-12-93 இன்று எமதில்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

36|17 பிரம்படிலேன்,
கொக்குவில். (6976)

பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்கள், பெறாமக்கள்

---

(சுப்பையா பேரின்பமூர்த்தி)

மாசற்ற நெஞ்சுடையன் தமிழீழ தேசத்தின்
காதலினால்
பேசத்தகுந்த பெரும் பணி புரிந்தான் - பேசுங்கால்
லெப். வேந்தன (பேரின்பமூர்த்தி) தமிழீழ
தேசத்தின் மீட்சிக்கே
தனை ஈகஞ்செய் திணைந்தான் தாய் மண்.

25-12-93 இன்று நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதிய போசனத்திலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மந்துவில் மேற்கு,
கொடிகாமம்.

திரு திருமதி சுப்பையா
குடும்பத்தினர்

(6955)

---

## 45-ம் நாள் கண்ணீர் அஞ்சலி



பிறப்பு
74.05.08

வீரச்சாவு:
11-11-93

### 2ஆம் லெப். யசோகணேஸ்

*[மணியம் சிவகணேசமூர்த்தி]*

வீரத்தின் பிறப்பிடத்தில்
வேங்கை பல உதித்த
திருமலை பெற்றெடுத்த
வீரப் பெருமகன்தான் தம்பி யசோகணேஸ்
தமீழ்த்தாயின் துயர் போக்க
அன்னையிட்ட நாமத்தை மாற்றி
அண்ணன் யசோதரன் வழியில் யசோகணேசானாய்
தமிழீழம் என்ற நாடு தலைநிமிர்ந்து வாழ்ந்திட
எதிரி குண்டை பல தடவை ஏந்தினாய்
நீண்ட பயணம் தான் ஆயினும் நீ கண்ட
இலக்கு தவறாது.

25-12-93 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் 45ஆம் நாள் நினைவு தினத்தில் கலந்து கொள்ளுமாறு போராளிகளை அன்புடன் அழைக்கின்றோம்.

''யசோதரன் இல்லம்''
696 நாவலர் றோட்,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

B. நிக்ஷன் யசோ

(7039)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம்ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

---

எழுதிய இந் நூலிற்கான வாழ்த்துரைகளை தமிழீழ கல்விக் கழகப்பொறுப்பாளர் வெ. இளங்குமரன், யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம்யாழ்.இந்துக்கல்லூரிமுன்னாள்உபஅதிபர் க. சிவராமலிங்கம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகப்பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையின் வெளியீட்டு உரையைத் தொடர்ந்து பேராசிரியர் அ. சண்முகதாஸ், செ. மட்றாஸ் மெயில்ஆகியோரின் ஆய்வுரைகளும் நூலாசிரியரின் பதிலுரையும் இடம் பெறும். முதற்பிரதியைமூத்த எழுத்தாளர் வரதர் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

## கருத்தரங்கு

தென்னைகளுக்கு பல்வேறு வகையில் உரமிடுதல், புனரமைப்புச் செய்தல் போன்ற விடயமாகசெய் விளக்கமாகச் செய்து காட்டலும், தென்னைப் பயிர்ச் செய்கை, தேங்காய் உற்பத்தியைக் கூட்டும் வழிமுறைகள், புனரமைப்பு, பீடைக்கட்டுப்பாடு ஆகிய விளக்கமான பயிற்சிக் கருத்தரங்கும் நடராஜா ராமலிங்கம் வித்தியாலயம்,ஆவரங்காலில் எதிர்வரும்திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ் மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருஜெ.சத்தியேந்திரன்தலைமையில் நடைபெறும். மேற்படி நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பகுதிப் பொது முகாமையாளர் (விவசாயம்) திரு. சஞ்ஜை அவர்களும், உதவி விவசாயப் பணிப்பாளர் அவர்களும் கலந்து சிறப்புரையாற்றுவார்கள்.

---

## குடிநீர்

1. கொதித்துஆறிய நீரை மட்டுமே குடிக்கவும்.

2. மலகூடம் பாவிக்கவும் அல்லது குழிகளில் மலம் கழித்து மூடி விடவும்.

3. மலகூடம் பாவித்த பின்பும். உணவு தயாரிக்க முன்பும் உணவுண்ண முன்பும் சவர்க்காரமிட்டுக் கை கழுவுங்கள்.

4. சுகாதாரமற்ற முறையில் தயாரித்து விற்கப்படும் உணவுகளைத் தவிர்க்கவும்.

5. வயிற்றுப்போக்கால் ஏற்பட்ட நீரிழப்பை ஈடுசெய்ய உடனடியாக நெல்லுப்பொரி நீர், கஞ்சி, இளநீர், கொதித்தாறிய நீர், தேநீர், தேசிக்காய் நீர் அல்லது ஜீவனிக் கரைசலை போதிய அளவு கொடுக்கவும்.

6. இரத்தம் சீதத்துடன் மலங்கழிந்தால் அல்லது வாந்தியும் காணப்பட்டால் வைத்திய உதவியை நாடுங்கள்.

---

ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன 600க்கும் மற்றும் பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

## ராஜீவ் கொலை வழக்கு ஜனவரி 19இல் விசாரணை

(டில்லி)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சாட்சிகளை விசாரிப்பது அடுத்தமாதம் 19ஆம் திகதி தொடங்கும் என்று உள்துறை இணை அமைச்சர் ராஜேஸ் பைலட் வியாழன் லோக்சபாவில்தெரிவித்தார்.

விசாரணையை விரைவாக நடத்தி முடிப்பதற்காக கொலைவழக்கை மட்டும் கவனிக்கும் பொறுப்பு சிறப்பு நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## மனித உரிமை மீறல்களில் பாக். அரசு ஈடுபடுகிறது

### மன்னிப்புச் சபை குற்றச்சாட்டு

(லண்டன்)

பாகிஸ்தான் அரசு மிகக் கடுமையான விதத்தில் மனித உரிமைகள் மீறலில் ஈடுபட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சாட்டி இருக்கின்றது. இத்தகைய மனித உரிமை மீறல்களுக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் அவ் அமைப்பு தற்போதைய பிரதமரான திருமதி பெனாசிர் பூட்டோவிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளது

பொலிஸ் காவலில் வைக்கப்படுவோர் சித்திரவதைக்குள்ளாவதும், காவலில் வைக்கப்படும் பெண்கள் மீது பாலியல் பலாத்காரம் புரியப்படுவதும், சித்திரவதைக்குள்ளாவோர் காவலில் இருக்கும்போது மரணமடைவதும் பாகிஸ்தானில் அதிகமாகி இருப்பதாகவும் அவ் அறிக்கை மேலும் சுட்டிக் காட்டியுள்ளது.

---

## இசை அரங்கு

நல்லை ஆதின ஆதரவில் ஆதீன கலா மண்டபத்தில் இன்று பி. ப. 2. 30மணிக்கு சங்கீத வித்துவான் ஏ. கே. கருணாகரன் அவர்களது கர்நாடக இசை அரங்கு நடைபெறவுள்ளது.

---

## இரவு

மண்டைதீவு இராணுவமுகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் யாழ். நகரக் கரையோரங்களில் வீழ்ந்துவெடித்ததாகத் தெரிய வருகிறது. எனினும் சேதவிபரம் தெரியவரவில்லை.

---

## யாழ் ஆயர்

எமக்கு ஒரு குமாரன் தரப்பட்டார்... அவர் அமைதியின் இளவரசர் என அழைக்கப்படுவார்'' என்ற இசையாஸ் இறைவாக்கினரின் செய்தி நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது. நீண்டகாலத்தின்பின் பெய்த கடும் மழையின் பயனாக ஒருபுறம் குளங்கள் கேணிகள் நிறைந்து எமது மண்ணை வளமாக்கியிருக்கிறது, மறுபுறத்தில் மூன்று வருடங்களுக்கு மேலாக தமது கிராமங்கள் ஊர்களிலிருந்து வெளியேறி கொட்டில்களிலும், அகதிமுகாம்களிலும் வாழும் நம் மக்களுக்கு சொல்லொண்ணா துன்பத்தையும் வேதனையையும் கொடுக்கின்றது,

புனித சூசையப்பரைப் போன்று எமது குடும்பத் தலைவர்களில் பலர் தமது குடும்பத்தைக் காப்பாற்ற வழியறியாது ஏங்கிநிற்கின்றனர். மரியன்னையைப் போன்று பல தாய்மார்கள் பசி, பட்டினி, வறுமை, அங்கலாய்ப்புக்களை தமக்குள் தாங்கியவர்களாக வாய்பேசாது மௌனிகளாகத் துன்புறுகின்றனர். இத்துன்ப நிலைகளினால் மிகவும் பாதிப்புக்குள்ளாகுபவர்கள் எமது பிள்ளைகளே. அடிப்படை வசதிகள் இன்றி தாங்கள் வளரும் பராயத்தை இப்படியும் வாழ வேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். ஆனால் இவை எல்லாம் ஒரு விடிவுகாலம் உண்டு என்ற நம்பிக்கையை இக்கிறிஸ்து பிறப்புக்காலம் எமக்கு நினைவூட்டுகின்றது. இருளிலும், மரண நிழலிலும் இருப்பவர்களுக்கு ஓர் ஒளி தோன்றியது. (லூக்,2:32) இன்று இளம் ஞாயிறு போல் எம்மத்தியில் பிறந்த யேசு எமது உள்ளக் கதவுகளைத் திறந்து துன்பப்பட்டோர், துயருறுவோர், ஒடுக்கப்பட்டோர், நலிந்தவர்கள் மட்டில் கருணையும், அன்புறவும் கொண்டவர்களாய் நாம்வாழ துணைபுரிவாராக. (17)